




# உன்னால் முடியும்

## பத்தாம் வகுப்பு

## பொதுத் தேர்வு சிறப்பு வழிகாட்டி

## தமிழ் முதல் தாள்

தொகுப்பு

**வே.நஞ்சகுமார்**

பட்டதாரி தமிழாசிரியர்,

அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, கிருஷ்ணகிரி.

Email: vnanjakumar@gmail.com

# தமிழ்
# முதல் தாள்

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. -வினா எண். 1 முதல் 6 வரை**

## செய்யுள்

1. 'கைதான் நெகிழவிடேன்' - இதில் நெகிழ என்பது _________ என்னும் பொருளில் வந்துள்ளது.
   1) தலர 2) தளர 3) தழர **விடை: தளர**
2. திருக்குறளைப்போற்றிப் பாடும் நூல்__________
   1) நால்வர் நான்மணிமாலை 2) திருவள்ளுவமாலை 3) இரட்டைமணிமாலை
   **விடை: திருவள்ளுவமாலை**
3. திருக்குறள்_____________ வெண்பாக்களால் ஆன நூலாகும்.
   1) சிந்தியல் 2) குறள் 3) நேரிசை **விடை: குறள்**
4. இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே எனப்பாடியவர்_____________
   1)பாரதியார் 2)சுரதா 3)பாரதிதாசன் **விடை: பாரதிதாசன்**
5. 'வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே' எனப் பாடியவர் __________
   1) பாரதிதாசன் 2) பரதியார் 3) கவிமணி **விடை: பாரதிதாசன்.**
6. சைவ சமயக் குரவர்____________________ பேர்.
   1)இரண்டு 2)மூன்று 3)நான்கு **விடை: நான்கு**
7. சைவத் திருமுறைகள்________________
   1) பத்து 2) பதினொன்று 3) பன்னிரண்டு **விடை: பன்னிரண்டு**
8. ஏலாதி_________________நூல்களுள் ஒன்று.
   1)பதினெண் மேற்கணக்கு 2)பதினெண் கீழ்க்கணக்கு 3)காப்பியம்
   **விடை: பதினெண் கீழ்க்கணக்கு**
9. கணிமேதாவியாரின் காலம்________
   1)கடைச்சங்ககாலம் 2).சங்கமருவியகாலம் 3)இடைக்காலம் **விடை: கடைச்சங்ககாலம்**
10. மருந்துப் பொருள்களால் அமையப்பெற்ற இருநூல்கள்______________
    1)திருக்குறள், நன்னூல் 2).திரிகடுகம்,ஏலாதி. 3)நற்றிணை, அகநானூறு
    **விடை: திரிகடுகம், ஏலாதி.**
11. இளங்கோவடிகள்_______________ நாட்டைச் சேர்ந்தவர்.
    1).சோழ 2).சேர 3).பாண்டிய **விடை: சேர**
12. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று பாடியவர்______________
    1)கவிமணி 2)பாரதிதாசன் 3) பாரதியார் **விடை:. பாரதியார்**
13. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்பது___________________
    1)சிலப்பதிகாரம் 2) மணிமேகலை 3)சூளாமணி **விடை: சிலப்பதிகாரம்**
14. கண்ணகியின் காற்சிலம்பில் உள்ள பரல்கள் __________________
    1) முத்து 2) பவளம் 3) மாணிக்கம் **விடை: மாணிக்கம்**
15. குடும்ப விளக்கு__________________படைத்த குறுங்காவியங்களில் ஒன்று.
    1) பாரதியார் 2) பாரதிதாசன் 3) சுரதா **விடை: பாரதிதாசன்**
16. பாரதிதாசனார் ___________________ என அழைக்கப்படுகிறார்
    1)புரட்சிக்கவிஞர் 2)தேசியக்கவிஞர் 3)உவமைக் கவிஞர் **விடை: புரட்சிக்கவிஞர்**
17. ஆறு காண்டங்களைக் கொண்டநூல்_______________
    1) சிலப்பதிகாரம் 2)கம்பராமாயணம் 3)சீறாப்புராணம் **விடை: கம்பராமாயணம்**
18. சரசுவதி அந்தாதி____________ இயற்றிய நூல்களில் ஒன்று.
    1)கம்பர் 2)ஒட்டக்கூத்தர் 3)புகழேந்தி **விடை: கம்பர்**
19. கம்பரைப் புரந்தவர்___________
    1)ஔவையார் 2) புகழேந்தி 3) சடையப்ப வள்ளல் **விடை: சடையப்ப வள்ளல்**

20. தமிழுக்குக் கதி எனப்படுவது______________
1) மணிமேகலை, சிலப்பதிகாரம் 2) கம்பராமாயணம், திருக்குறள் 3)நாலடியார், நான்மணிக்கடிகை
**விடை: கம்பராமாயணம், திருக்குறள்**

21.நல் என்னும் அடைமொழி பெற்ற நூல்___________
1)அகநானூறு 2)கலித்தொகை 3)நற்றிணை **விடை: நற்றிணை.**

22. நற்றிணையைத் தொகுப்பித்தவர்_______________
1)பன்னாடுதந்த மாறன்வழுதி 2)இளம்பெரு வழுதி 3)உக்கிரப் பெருவழுதி.
**விடை: பன்னாடுதந்த மாறன்வழுதி**

23. நற்றிணை____________ நூல்களைச் சார்ந்தது.
1) பத்துப்பாட்டு 2) எட்டுத்தொகை 3). பதினெண் கீழ்க்கணக்கு. **விடை: எட்டுத்தொகை**

24. சேக்கிழார் பெருமான் அருளியது____________
1) சிவபெருமான் 2)பெரியபுராணம் 3)தலப்புராணம் **விடை: பெரியபுராணம்**

25. தம் வீட்டிலுள்ள அனைத்துப்பொருள்களுக்கும் திருநாவுக்கரசர் எனப்பெயர் வைத்தவர்________
1)அப்பூதியடிகளார் 2) மாறநாயனார் 3)திருநீலகண்டர். **விடை: அப்பூதியடிகளார்**

26. தேசமுய்ய வந்தவரைத் திருவமுது செய்விக்கும்
நேசமுற விண்ணப்பம் செயஅவரும் அதுநேர்ந்தார் - இப்பாடல் அடிகளில் அமைந்த தொடை
1) மோனை 2) எதுகை 3) இயைபு **விடை: எதுகை**

27. பக்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ எனப்பாடியவர்__________
1)பெ. சுந்தரனார் 2) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் 3) கவிஞர் பெ. இராமலிங்கனார்
**விடை: மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்**

28. உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியம் __________
1. தேவாரம் 2. பெரியபுராணம் 3. திருவாசகம் **விடை: பெரியபுராணம்**

29. திறனறிந்து தேர்ந்து கொள்ள வேண்டியவர்________________
1)அன்புள்ள பெற்றோர் 2) ஆர்வமுள்ள நண்பர் 3) மூத்த அறிவுடையார்
**விடை: மூத்த அறிவுடையார்**

30. அரியவற்றுள் எல்லாம் அரிது________________பேணித் தமராக்கொளல்
1)சிறியவர் 2) பெரியார் 3).உறவினர் **விடை: பெரியார்**

31. முதலிலார்க்கு _____________இல்லை.
1) ஊதியம் 2) நட்பு 3)பகை **விடை: ஊதியம்**

32. திருநாவுக்கரசர் காலம்______________ ஆம் நூற்றாண்டு.
1) கி.பி.12. 2) கி.பி.7. 3) கி.பி.9. **விடை: கி.பி.7.**

33. "நாமார்க்கும் குடியல்லோம்" என்னும் பாடல்____________ 'அச்சமில்லை அச்சமில்லை' எனப் பாடத் தூண்டியது.
1) பாரதிதாசனை 2)சுரதாவை 3) பாரதியாரை **விடை: பாரதியாரை**

34. சீறாப்புராணம் ________________ காண்டங்களையுடையது.
1) மூன்று 2) ஐந்து 3) ஏழு **விடை : மூன்று**

35. 'கேழல்' என்பதன் பொருள் ________________
1) எருமை 2) புலி 3) பன்றி **விடை : பன்றி**

36. கலித்தொகை ________________ நூல்களில் ஒன்று.
1) பத்துப்பாட்டு 2) எட்டுத்தொகை 3) பதினெண்கீழ்க்கணக்கு **விடை : எட்டுத்தொகை**

37. நெய்தல் கலியைப் பாடியவர் ________________.
1) ஓரம்போகியார் 2) கபிலர் 3) நல்லந்துவனார் **விடை : நல்லந்துவனார்**

38. போற்றாரைப் பொறுத்தல் என்பது ________________ எனப்படும்.
1) பொறை 2) முறை 3) நிறை **விடை : பொறை**

39. நந்திக் கலம்பகம் ________________ வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்று.
1) 96 2) 18 3) 10 **விடை : 96**

40. பணை என்னும் சொல்லின் பொருள் ________________
1) அரசு 2) ஆல் 3) மூங்கில் **விடை : மூங்கில்**

41. பெருமாள் திருமொழியில் ________________ பாசுரங்கள் உள்ளன.
1) இருநூற்றைந்து 2) நூற்றைந்து 3) நூறு **விடை : நூற்றைந்து**

42. குலசேகராழ்வார் பாடல் ________________ தொகுப்பில் உள்ளது.
1) திருவியற்பா 2) முதலாயிரம் 3)பெரியதிருமொழி **விடை : முதலாயிரம்**

## உரைநடை

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி எனக் கூறியவர்_____-
1)திரு.வி.க 2)உ.வே.சா 3)பாவாணர் **விடை:பாவாணர்**

2) இன்றைய மதுரையில்______தமிழ்ச்சங்கம் இருந்தது.
1)மூன்றாம் 2)இரண்டாம் 3)முதலாம் **விடை:மூன்றாம்**

3) அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும் போது நம் சமுதாயத்தில் தலைகீழ் புரட்சி ஏற்படும் என்றவர்
1)திரு.வி.க 2)பெரியார் 3)பாரதிதாசன் **விடை:பெரியார்**

4) பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று__________இல்லாமை.
1)வாக்குரிமை 2)பேச்சுரிமை 3)சொத்துரிமை **விடை:சொத்துரிமை**

5. மும்பையில் அம்பேத்கர் சிறிது காலம் _________ பேராசிரியராகப் பணியாற்றினார்
1. வணிகவியல் 2. அறிவியல் 3. பொருளியல் **விடை : பொருளியல்**

6. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது _________ .
1. பத்மஸ்ரீ 2. பாரதரத்னா 3. பத்மவிபூசன் **விடை: பாரதரத்னா**

7. நுண்ணிய நூல்பல கற்றவர்க்கே அமைந்த அரியகலை ____________
1. ஓவியக்கலை 2. இசைக்கலை 3. பேச்சுக்கலை **விடை : பேச்சுக்கலை**

8. மேடைப் பேச்சில் மக்களை ஈர்த்தவர் _______
1. பேரறிஞர் அண்ணா 2. மு.வரதராசனார் 3. கா.அப்பாத்துரையார்.
**விடை: பேரறிஞர் அண்ணா**

9. பண்ணொடு தமிழொப்பாய் எனத்தொடங்கும் பாடல் இடம் பெற்ற நூல்
1. திருவாசகம் 2. திருக்குறள் 3. தேவாரம் **விடை : தேவாரம்**

10. உலகம் என்ற தமிழ்ச்சொல் _______ என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது.
1. உலகு 2. உலவு 3. உளது **விடை : உலவு**

11. தமிழர்கள் நிலத்தை ______ வகையாகப் பிரித்துக்காட்டியிருக்கிறார்கள்
1. மூன்று 2. ஆறு 3. ஐந்து **விடை : ஐந்து**

12. 'உறுமிடத் துதவா உவர்நிலம்' என்னும் வரிகள் இடம்பெற்ற நூல்
1. புறநானூறு 2. அகநானூறு 3. கலித்தொகை **விடை: புறநானூறு**

13. 'புல்லாகிப் பூடாய்' எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்ற நூல்
1. திருவாசகம் 2. தேவாரம் 3. பெரியபுராணம் **விடை: திருவாசகம்**

14. காந்தியடிகள்_____________நாடகத்தைப் பார்த்து உண்மையே பேச வேண்டும் என்று உறுதி பூண்டார்
1. சிரவண பிதுர்பத்தி 2. அரிச்சந்திரன் 3. பக்தபிரகலாதன் **விடை: அரிச்சந்திரன்**

15. பகைவனிடமும் அன்புகாட்டு எனக் கூறிய நூல் ________
1. பகவத்கீதை 2. நன்னூல் 3. பைபிள் **விடை : பைபிள்**

16. அறநெறியாகப் போற்றப்பட வேண்டியவை ________
1. ஆடம்பரம், வீண்செலவு 2. எளிமை, சிக்கனம் 3. அன்பு, அருள்
**விடை : எளிமை, சிக்கனம்**

17. உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்றுள்ள நூல் ____
1. கந்தபுராணம் 2. சீறாப்புராணம் 3. பெரியபுராணம் **விடை : பெரியபுராணம்**

18. வள்ளலாரின் இயற்பெயர் ________
1. சம்பந்தர் 2. இராமலிங்கர் 3. தாயுமானவர் **விடை : இராமலிங்கர்**

19. பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி ________
1. பத்தாம் வகுப்பு 2. பன்னிரண்டாம் வகுப்பு 3. எட்டாம் வகுப்பு
**விடை : பன்னிரெண்டாம் வகுப்பு**

20. விரல்கள் பத்தும் மூலதனம் என்னும் பாடலின் ஆசிரியர் ________
1. பாரதியார் 2. பாரதிதாசன் 3. தாராபாரதி **விடை : தாராபாரதி**

## கோடிட்ட இடங்களை நிரப்புக - வினா எண். 7 முதல் 12 வரை

### செய்யுள்

1. மாணிக்க வாசகர் பிறந்த ஊர்________ **விடை :திருவாதவூர்**
2. மாணிக்கவாசகர் பாடல்கள்________திருமுறையில் இடம்பெற்றுள்ளன. **விடை : எட்டாம்**
3. மாணிக்க வாசகர் கட்டிய கோயில் ________உள்ளது. **விடை : திருப்பெருந்துறையில்**
4. மாணிக்க வாசகர் ________மன்னரிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றியவர்
**விடை : அரிமர்த்தன பாண்டிய**
5. ஜி.யு. போப் திருவாசகத்தை________மொழியில் மொழிபெயர்த்தார். விடை :**ஆங்கில**
6. திருவாசகத்திற்கு உருகார்________உருகார். **விடை : ஒரு வாசகத்திற்கும்**
7. அழுது அடியடைந்த அன்பர் எனப்படுபவர்________ **விடை : மாணிக்கவாசகர்**
8. திருக்குறளில்______ அதிகாரங்களும் ______ குறட்பாக்களும் உள்ளன. **விடை : (133, 1330)**
9. திருக்குறள் ________ முதலான உலக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
**விடை : ஆங்கிலம்,கிரேக்கம், இலத்தீன்**
10. ஒழுக்கத்தின் எய்துவர் ________இழுக்கத்தின் எய்துவர்________பழி.
**விடை : மேன்மை, எய்தாப்**
11. திருக்குறள்________நூல்களுள் ஒன்று விடை : **பதினெண் கீழ்க்கணக்கு**
12. இரட்டைக் காப்பியங்கள் என்பன சிலப்பதிகாரமும்,______ஆகும். **விடை: மணிமேகலையும்**
13. சிலப்பதிகாரம், மணிமேகலை________வளையாபதி, ________என்பன ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும். **விடை : சீவகசிந்தாமணி, குண்டலகேசி**
14. தேரா மன்னன்________ **விடை : பாண்டியன்**
15. புள்ளுறு புன்கண் தீர்த்தோன்________. **விடை : சிபிச்சக்கரவர்த்தி**
16. அரும் பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்________ **விடை : மனுநீதிச்சோழன்**
17. சிலப்பதிகாரத்தின் காண்டம்________ ,காதை______ **விடை : 3,30**
18. கம்பர் பிறந்த ஊர் ________ **விடை : தேரழுந்தூர்**
19. கம்பரை ஆதரித்த வள்ளல் ________ **விடை : சடையப்பவள்ளல்**
20. கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு ________எனப்பெயரிட்டார். **விடை : இராமவதாரம்**
21. நன்றிணை ஒன்பதடிச் சிற்றெல்லையும் ________பேரெல்லையும் கொண்ட நூல்.
**விடை : பன்னிரண்டு அடிப்**
22. அரி என்னும் சொல்லின் பொருள்________ **விடை : நெற்கதிர்**
23. சேக்கிழாரின் இயற்பெயர்________ **விடை : அருண்மொழித்தேவர்**
24. உத்தம சோழப் பல்லவர் என்றழைக்கப்படுபவர் ________ **விடை : சேக்கிழார்**
25. தனியடியார்________ தொகையடியார் ________ ஆவர். **விடை : 63 பேர், 9 பேர்**
26. போலிப் புலவர்களைத் தலையில் குட்டுபவர் ________ **விடை: பிள்ளைப் பாண்டியன்**
27. போலிப் புலவர்களின் தலையை வெட்டுபவர் ________ **விடை : ஒட்டக்கூத்தன்**
28. போலிப் புலவர்களின் காதில் துறடு மாட்டி அறுப்பவர்________ **விடை : வில்லிபுத்தூரார்**
29. மனம், புத்தி, சித்தம், ________ என்பன நாற்கரணங்கள். **விடை: அகங்காரம்**
30. இடிப்பாரை இல்லாத ______ மன்னன் கெடுப்பார் இலானுங் கெடும். **விடை: ஏமரா**
31. இல்லாரை ________ எள்ளுவர் **விடை : எல்லாரும்**
32. அறனீனும் இன்பமும் ஈனும் ________தீதின்றி வந்தபொருள் **விடை : திறனறிந்து**
33. திருநாவுக்கரசரின் தமக்கையார் ________ஆவார் **விடை : திலகவதியார்**
34. திருநாவுக்கரசர் அருளிய பாடல்கள்________ என அழைக்கப்படுகிறது. **விடை : தேவாரம்**

35. திருநாவுக்கரசரின் இயற்பெயர்____________ **விடை : மருணீக்கியார்**
36. சீறாப்புராணத்தை இயற்றியர் ____________ **விடை : உமறுப் புலவர்**
37. உமறுப் புலவரை ஆதரித்த வள்ளல்____________ **விடை : சீதக்காதி**
38. தார் வேந்தன் கோல் நோக்கி வாழும் ____________ போன்றிருந்தேனே. **விடை : குடி**
39. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில்______ குலசேகரர் பாடியதாகும். **விடை : திருவாய் மொழி**

## உரைநடை

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. தமிழர் மனித வாழ்வை______,__________எனப்பிரித்தனர் **விடை: அகம்,புறம்**
2. குமரிக் கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழி_________**விடை: தமிழ்**
3. 2004ஆம் ஆண்டு ________திங்களில் தமிழ் மொழியைச் செம்மொழியாக நடுவணரசு அறிவித்தது. **விடை: அக்டோபர்**
4. தமிழ் மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியியல் அறிஞர்________ஆவார் **விடை: மாக்சுமுல்லர்.**
5. தமிழர்களிடம் இன்று பரவியுள்ள ________ஒன்று உண்டு. **விடை: பெருநோய்**
6. பெரியார் சமூக ______________எதிர்த்தவர்.மூடக் கருத்துக்களை__________ **விடை: முரண்களை, முட்டறுத்தவர்**
7. வெறும் பேச்சுக்கும்________ பேச்சுக்கும் வேறுபாடு உண்டு. **விடை: மேடைப்**
8. பேச்சு முடிவில் _________கூறிக் கருத்தை நிலைநாட்டி முடிக்க வேண்டும். **விடை:சுருக்கத்தைக்**
9. நடிப்பாற்றல் மிக்கவரையும் நடிப்பைக் கற்றுத் தருபவரையும் __________என அழைப்பர் **விடை: இயக்குநர்**
10. படப்பிடிப்புக் கருவியை___________பொருத்துவதும் உண்டு. **விடை: நகர்த்தும் வண்டியில்.**
11. கருத்துப்படம் அமைக்கத் தொடங்கியவர் ___________ **விடை: வால்ட் டிஸ்னி**
12. இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு ________இருக்கும். **விடை: வேடிக்கையாக**
13. இலெமூரியாவை _________என்பர். **விடை: மனித நாகரிகத்தொட்டில்**
14. தனக்குவமையில்லா ஒரு_________தமிழ்இனம். **விடை: தனிஇனம்**
15. அனைத்தையும் இழப்பினும் உண்மையை இழக்கிலேன் எனக் கூறியவர் __________ **விடை: அரிச்சந்திரன்.**
16. திருக்குறளை மொழி பெயர்த்த உருசிய அறிஞர்_________ **விடை: தால்சுதாய்**
17. இராமலிங்கர் சத்திய தருமசாலையை நிறுவிய இடம்________ **விடை: வடலூர்**
18. இராமலிங்கர்,தமிழ்மொழியே______ தரும் என்று கருதினார் **விடை: இறவாத நிலை**
19. சங்க காலத்தில் பெண்கள் _________கடந்து செல்லக்கூடாது. **விடை: கடல்**
20. நாள்தோறும்கல்வியில்______உண்டாகிக் கொண்டிருக்கின்றன. **விடை: புதுப்புதுத்துறைகள்**
21. காவலர்,இராணுவம் போன்ற பணிகளுக்கு உடற்கூறு தேர்வும்_______தேர்வும் உண்டு. **விடை: எழுத்து**

## பொருத்துக. - வினா எண் 13 முதல் 16 வரை

01)

| **சொல்** | - | **பொருள்** |
|---|---|---|
| 1. விரை | - | அ. உடல் |
| 2 கழல் | - | ஆ. பெருகி |
| 3. ததும்பி | - | இ. மணம் |
| 4. மெய் | - | ஈ. அணிகலன் |

**விடை:1-இ, 2-ஈ, 3-ஆ, 4-அ,**

02

| **பிரிவு** | - | **அதிகாரங்கள்** |
|---|---|---|
| 1. அறத்துப்பால் | - | அ. 25 அதிகாரங்கள் |
| 2. பொருட்பால் | - | ஆ. 38 அதிகாரங்கள் |
| 3. இன்பத்துப்பால் | - | இ. 70 அதிகாரங்கள் |
| | - | ஈ 50 அதிகாரங்கள் |

**விடை:1-ஆ, 2-இ, 3-அ,**

03 **காண்டம்** **காதைகள்**

1. புகார்க் காண்டம் - அ. 13 காதைகள்
2. மதுரைக் காண்டம் - ஆ. 7 காதைகள்
3. வஞ்சிக் காண்டம் - இ. 10 காதைகள் **விடை:1-இ, 2-அ, 3-ஆ,**

04. **சொல்** **பொருள்**

1. இடர் - அ. நிலவு
2. நாவாய் - ஆ. துன்பம்
3. இறை - இ. படகு
4. இந்து - ஈ. தலைவன் **விடை:1-ஆ, 2-இ, 3-ஈ, 4.அ,**

05
1. செறு - அ. பனையோலைப்பெட்டி
2. வித்து - ஆ. புதுவருவாய்
3. யாணர் - இ. விதை
4. வட்டி - ஈ. வயல் **விடை:1-ஈ, 2-இ, 3-ஆ, 4.அ,**

06
1. மேதி - அ. சிவன்
2. சந்தம் - ஆ. எருமை
3. கோதில் - இ. அழகு
4. அங்கனர் - ஈ. குற்றமில்லாத **விடை:**1-ஆ, 2-இ, 3-ஈ, 4.அ,

07
1. கான் - அ. கரடி
2. உழுவை - ஆ. சிங்கம்
3. மடங்கல் - இ. புலி
4. எண்கு - ஈ. காடு **விடை:1-ஈ, 2-இ, 3-ஆ, 4.அ,**

08
1. பண்பு - அ. கூறியது மறா அமை
2. அன்பு - ஆ. பேதையார் சொல் நோன்றல்
3. அறிவு - இ. தன்கிளை செறா அமை
4. செறிவு - ஈ. பாடறிந்து ஒழுகல் **விடை:1-ஈ, 2-இ, 3-ஆ, 4.அ,**

**பொருத்துக (உரைநடை**

01
1. ஈஸ்ட்மன் _ அ. ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவி
2. எடிசன் _ ஆ. படச்சுருள்
3. எட்வர்டு மைபிரிட்சு _ இ. கருத்துப்படம்
4. வால்ட் டிஸ்னி _ ஈ. இயக்கப்படம் **விடை: 1-ஆ, 2-அ, 3-ஈ, 4-இ,**

02
1. சத்யசோதனை _ அ. திருவள்ளுவர்
2. பகவத்கீதை _ ஆ. கிறிஸ்துவ சமய நூல்
3. திருக்குறள் _ இ. காந்தியடிகள்
4. பைபிள் _ ஈ. இந்து சமய நூல் **விடை: 1-இ, 2-ஈ, 3-அ, 4-ஆ.**

03
1. வினையே ஆடவர்க்குயிர் _ அ. நாமக்கல் கவிஞர்
2. முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை _ ஆ. குறுந்தொகை
3. உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே _ இ. தொல்காப்பியர்
4. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் _ ஈ. திருமூலர்

**விடை: 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-அ.**

**பொருத்துக ( நூலாசிரியர் - நூல்)**

1. சாலை இளந்திரையன் - கலித்தெகை
2. திருநாவுக்கரசர் - சீறாப்புராணம்
3. நல்லந்துவனார் - பூத்தது மானுடம்
4. உமறுப்புலவர் - தேவாரம் **விடை: 1- இ, 2-ஈ, 3-அ, 4-ஆ**

**விடைகளுக்கு ஏற்ற வினா எழுதுக - வினா எண். 17 முதல் 20 வரை**

1. பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும் என்று விரும்பியவர் பெரியார்.
   ❄ **பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும் என்று விரும்பியவர் யார்?**
2. பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார்.
   ❄ **பெரியார் எதை ஏற்க மறுத்தார்?**
3. செய்திப்படங்கள் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்.
   ❄ **எவற்றின் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்?**
4. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி ஒலிப் படக்கருவி பயன்படுகிறது.
   ❄ **திரையரங்குகளில் திரைப்படம் காட்ட எக்கருவி பயன்படுகிறது?**
5. தமிழர்கள் அரபு நாட்டுடனும், யவன நாட்டுடனும் வாணிகத்தொடர்பு கொண்டிருந்தார்கள்
   ❄ **தமிழர்கள் எந்தெந்த நாடுகளுடன் வாணிகத்தொடர்பு கொண்டிருந்தனர்?**
6. காந்தியடிகள், பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதினார்
   ❄ **பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதியவர் யார்?**
7. இளைஞர்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், தெய்வப்பற்றும் வளரும் வகையில் கல்வி அமைதல் வேண்டும்.
   ❄ **கல்வி எவ்வாறு அமைதல் வேண்டும்?**
8. இளங்கலைப் பட்டம் பெற்றவர்கள், இளங்கலைக் கல்வியியல் பட்டம் பெற்றிருந்தால் பட்டதாரி ஆசிரியர் பணியில் சேரலாம்.
   ❄ **பட்டதாரி ஆசிரியர் பணியில் சேரத் தகுதி என்ன?**
9. தொழில்நுட்பப் பயிலகத்தில் பயில்வோர்க்கு நிறைய வேலை வாய்ப்புகள் உள்ளன
   ❄ **எத்துறையில் பயில்வோர்க்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன?**
10. எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரி நடத்துவதே சமத்துவமாகும்.
    ❄ **எது சமத்துவமாகும்?**
11. காந்தியடிகள் பகவத்கீதையைப் படித்ததன் மூலம் மனவுறுதியைப் பெற்றார்
    ❄ **காந்தியடிகள் எதைப் படித்ததன் மூலம் மனவுறுதியைப் பெற்றார்?**
12. எல்லா உயிர்களையும் தம்முயிராய்க் கருதி தொண்டு செய்பவர் உள்ளத்தில் தான் இறைவன் நடம் புரிவான்.
    ❄ **யாருடைய உள்ளத்தில் இறைவன் நடம் புரிவான்?**
13. பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சி ஆகும்.
    ❄ **பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி எது?**
14. நமக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் மிகவும் பழமையானது தொல்காப்பியம்.
    ❄ **நமக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் மிகவும் பழமையானது எது?**
15. ஆசிரியர் என்பவர் அறிவுக்கடலாக மட்டுமின்றி அறத்தின் ஆழியாகவும் விளங்கவேண்டும்.
    ❄ **ஆசிரியர் என்பவர் எவ்வாறு விளங்கவேண்டும்?**
16. இலக்கியத்தின் கூறுகள் என்பவை மருந்தின் மேலிட்ட இனிப்புப் போன்றவை.
    ❄ **இலக்கியத்தின் கூறுகள் என்பவை எவற்றைப் போன்றவை.**
17. திருக்குறளை மொழிபெயர்த்த உருசிய அறிஞர் தால்சுதாய்.
    ❄ **திருக்குறளை மொழிபெயர்த்த உருசிய அறிஞர் யார்?**
18. இராமலிங்கர் சத்திய தருமச்சாலையை நிறுவிய இடம் வடலூர்.
    ❄ **இராமலிங்கர் சத்திய தருமச்சாலையை நிறுவிய இடம் எது?**
19. எல்லா உயிர்களையும் ஒரே மாதிரி நடத்துவதே சமத்துவம் ஆகும்.
    ❄ **எது சமத்தும் ஆகும்?**
20. வள்ளலார் அருளிய வழிமுறைகளைக் கடைபிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்.
    ❄ **யார் அருளிய வழிமுறைகளைக் கடைபிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்?**
21. அறிவு அற்றம் காக்கும் கருவி என்றார் வள்ளுவர்.
    ❄ **அறிவு அற்றம் காக்கும் கருவி என்றவர் யார்?**
22. திரைப்படம் எடுப்பதனைவிட செய்திப்படம் எடுப்பது கடினமான பணியாகும்.
    ❄ **திரைப்படம் எடுப்பதனைவிட கடினமான பணி எது?**
23. எடுத்தல், தொடுத்தல், முடித்தல் ஆகியன பேச்சின் முக்கூறுகள் ஆகும்.

❄ **பேச்சின் முக்கூறுகள் யாவை?**

24. இராமலிங்கர் தமிழ் மொழியே இரவாத நிலை தரும் என்று கூறினார்.
❄ **இராமலிங்கர் எது இரவாத நிலை தரும் என்று கூறினார்?**

25. தமிழர்கள் மனித வாழ்வை அகம் புறம் என பிரித்தனர்.
❄ **தமிழர்கள் மனித வாழ்வை எவ்வாறு பிரித்தனர்?**

# செய்யுள்

## குறு வினாக்கள் - வினா எண். 21 முதல் 27 வரை

1. **உயிரினும் ஓம்பப்படுவது எது? ஏன்?**
❖ உயிரினும் ஓம்பப்படுவது ஒழுக்கம்.
❖ ஏனெனில் அது ஒருவருக்கு எல்லாச் சிறப்புகளையும் தருகிறது.

2. **நன்றிக்கு வித்தாவது எது?**
நன்றிக்கு வித்தாவது நல்லொழுக்கமே ஆகும்.

3 .**என்றும் இடும்பை தருவது எது?**
தீய ஒழுக்கம் எக்காலத்திலும் ஒருவனுக்குத் துன்பத்தையே (இடும்பை) தரும்.

4. **பல கற்றும் கல்லார் அறிவிலார்,யார்?**
❖ உயர்ந்த சான்றோரின் அறவுரைகளைப் பின்பற்றி நடவாதவர்.
❖ நூல் பல கற்றிருந்தாலும் அவர் அறிவற்றவர் ஆவர்.

5. .**கூகையையும் காக்கையையும் எடுத்துக்காட்டி வள்ளுவர் விளக்குவது யாது?**
❖ தன்னைவிட வலிமையான கோட்டானைக் காக்கை பகலில் வெல்லும்
❖ அதைப் போலப் பகைவரை வெல்லக் கருதும் அரசர்க்கு அதற்கேற்ற காலம் இன்றியமையாததாகும்.

6. **ஞாலம் வெல்லக் கருதுபவர் யாது செய்வர்?**
❖ ஒருவன் தான் செய்யும் செயலைக் காலம் அறிந்து, இடத்தோடு பொருந்துமாறு செய்தால்,
❖ அவன் இவ்வுலகம் முழுவதையும் ஆளக் கருதினாலும் அது அவனுக்கு முடியும்.

7. **ஊக்கமுடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது?**
❖ ஊக்கமுடையவன் அடங்கியிருத்தல்
❖ போர் செய்கின்ற ஆட்டுக்கடா பகையைத் தாக்கக் கருதிப் பின் வாங்குவதைப் போன்றதாகும்.

8. **கொக்கைச் சான்றாகக் காட்டி வள்ளுவர் விளக்கும் கருத்து யாது?**
❖ செயலை மேற்கொள்ளாத காலத்தில் கொக்கினைப் போல அடங்கியிருத்தல் வேண்டும்.
❖ செயல் வாய்க்குமிடத்துக் கொக்கினைப் போல் விரைந்து செய்து முடிக்க வேண்டும்.

9. **திருவள்ளுவருக்கு வழங்கும் வேறுபெயர்கள் யாவை?**
❖ முதற்பாவலர், ❖ பொய்யில் புலவர், ❖ தெய்வப்புலவர், ❖ செந்நாப் போதார்,
❖ பெருநாவலர், ❖ தேவர்.

10. **பாரதிதாசன் திருவள்ளுவரை எவ்வாறு புகழ்ந்துள்ளார்?**
திருவள்ளுவரைப் பாரதிதாசன்,"வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே"என்று புகழ்ந்துள்ளார்.

11. **ஒழுக்கத்தால் எய்துவது எது? இழுக்கத்தினால் எய்துவது எது?**
❖ ஒழுக்கத்தால் எய்துவது உயர்வு.
❖ இழுக்கத்தினால் எய்துவது பெரும்பழி.

12. **செய்தற்கரிய செயல் செய்வது எப்போது?**

அரிய வாய்ப்பு கிடைக்கும் போது செய்தற்கரிய செயல்களை செய்து முடித்திட வேண்டும்.

**13. ஏலாதி-நூற் குறிப்பு எழுதுக.**

❖ ஏலம்+ஆதி-ஏலாதி. ஏலக்காய், இலவங்கம், சுக்கு, சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி ஆகிய ஆறு பொருள்களால் செய்யப்பட்ட மருந்து உடலின் நோயைப் போக்கும்.

❖ அதுபோல, இந்நூலில் ஒவ்வொரு பாட்டிலும் உள்ள ஆறு கருத்துகள் மக்களின் அறியாமையைப் போக்கும்.

**14. பழியிலா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை?**

❖ பிறரிடம் பணிவுடையவனாய் இருத்தல், ஒழுக்கநெறியில் நடத்தல், சான்றோர் அறிவுரையைப் பின்பற்றுதல்.

❖ நுட்பமான நூல்களை ஆராய்தல், அவை கூறும் நெறியில் வாழ்தல்.

**15. கம்பர் குறிப்பு வரைக.**

❖ ஊர் : தேரழுந்தூர்

❖ ஆதரித்தவர் : சடையப்ப வள்ளல்

❖ காலம் : கி.பி.12-ம் நூற்றாண்டு

❖ நூல்கள் : கம்பராமாயணம், சரசுவதி அந்தாதி

**16. கையுறைப் பொருள்களாகக் குகன் கொண்டு சென்றன எவை?யாருக்குக் கொண்டு சென்றான்?**

❖ குகன் தேனையும், மீனையும் கையுறைப் பொருள்களாகக் கொண்டு சென்றான்

❖ இராமனுக்குக் கொண்டு சென்றான்.

**17. குகன் இராமனைக் கண்டு எவ்வாறு பணிந்து வணங்கினான்?**

குகன், தன் நீண்ட முடியை உடைய தலை, மண்ணில் படியக் கீழே விழுந்து இராமனை வணங்கினான்.

**18. குகனின் வேண்டுகோள் யாது?**

❖ ‘இந்தத் துன்பத்தோடு உன்னைப் பிரிந்து எனது இருப்பிடம் செல்லமாட்டேன்

❖ ஐயனே ! இங்கிருந்து என்னாலான அடிமைத் தொழிலை உனக்குச் செய்வேன்’ என குகன் இராமனிடம் வேண்டினான்.

**19. அன்புள இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானோம் - யார் , யாரிடம் கூறியது ?**

இராமன் , குகனிடத்தில் கூறியதாகும்.

**20. திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் வினவியதென்ன?**

தண்ணீர்ப் பந்தலின் முகப்பில் தனது பெயரை எழுதாமல் வேறொரு பெயரை எழுதி வைத்தமைக்கு காரணம் என்ன என திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் வினவினார்.

**21. அப்பூதியடிகள் எத்தகைய பண்பாளர் ?**

❖ அப்பூதியடிகள் களவு , பொய் , காமம் , சினம் முதலிய குற்றங்கள் நீங்கியவர்.

❖ வளமான இல்லற வாழ்வினர்.

**22. அப்பூதியடிகள் எவற்றுக்கெல்லாம் திருநாவுக்கரசு எனப் பெயர்வைத்தார் ?**

❖ அளவுக்கருவிகள் ❖ நிறைகோல் ❖ மக்கள் ❖ பசுக்கள் ❖ எருமைகள் போன்றவற்றிற்கு திருநாவுக்கரசர் எனப் பெயர் வைத்தார்.

**23. வந்தவர் வாகீசர் என அறிந்ததும் அப்பூதியடிகள் என்ன செய்தார் ?**

❖ தம் தலைமேல் கைகுவித்து வணங்கினார். தம் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிட நின்றார்

❖ சொற்கள் தடுமாறின , மயிர்சிலிர்க்கப் பூமியில் வீழ்ந்து அவர் பாதங்களில் தம் தலைபடிய வணங்கினார்.

**24. நும்பேர் எழுதாதே வேறொருபேர் முன்னெழுத வேண்டிய காரணம் என்கொல் ? யார் யாரிடம் கூறியது ?**

திருநாவுக்கரசர் , அப்பூதியடிகளிடம் கூறியது.

**25 .“இப்போது இங்கு அவன் உதவான்” யார் , யாரிடம் கூறியது ?**

அப்பூதியடிகள் , திருநாவுக்கரசரிடம் கூறியது

**26. திருநாவுக்கரசர் மூத்த திருநாவுக்கரசரை எங்ஙனம் உயிர்த்தெழச் செய்தார்?**

‘ஒன்றுகொலாம்’ எனத்தொடங்கும் பதிகம் பாடி உயிர்த்தெழச் செய்தார்.

**27. வயலின் வரப்புகளாகக் கூறப்படுபவை யாவை ?**

❖ வெண்பா ❖ ஆசிரியப்பா ❖ கலிப்பா ❖ வஞ்சிப்பா.

**28. வயல் தரும் விளைவுகள் யாவை ?**

❖ அறம் ❖ பொருள் ❖ இன்பம் ❖ வீடு

**29. போலிப் புலவர்களைத் தண்டிப்போர் யார் ?**

1. பிள்ளைப் பாண்டியன் 2. வில்லிபுத்தூர் ஆழ்வார். 3. ஒட்டக் கூத்தர்

**30. வன்னையுள் எல்லாம் தலையாயது எது ?**

தம்மைவிட அறிவில் சிறந்த பெரியோரை உறவினாராய் ஏற்று நடத்தல்.

**31. கெடுப்பார் இலானுங் கெடுபவர் யார் ?**

கடிந்து அறிவுரைகூறும் பெரியோரைத் தமக்குத் துணையாய்க் கொள்ளாதவர், பகைவர் இன்றிக் கெடுவர்

**32. நல்லார் தொடர்பு கைவிடுதல் - எத்தன்மைத்து ?**

நன்மை பொருந்திய சான்றோரின் நட்பைக் கைவிடுவது , தான் தனித்து நின்று பலரோடு பகை கொள்வதைவிடப் பத்து மடங்கு தீமை தரும்.

**33. வேந்தற்குரிய பொருள்கள் யாவை ?**

❖ அரசு உரிமையால் வரும் பொருள்.
❖ மக்கள் வரியாகத் தரும் பொருள்.
❖ பகைவரிடமிருந்து திறையாய்க் கொள்ளும் பொருள்.

**34. தேவாரம் - பொருள் எழுதுக.**

❖ தே + வாரம் - தெய்வத்தைப் பற்றிய இன்னிசைப் பாடல்கள்.
❖ தே + ஆரம் - தெய்வத்திற்கு அணியும் பூமாலை போன்ற பாமாலை.

**35. சிவபெருமான் எத்தன்மையன் ?**

❖ சிவபெருமான் எவருக்கும் அடிமையாகாத தன்மையன்.
❖ ஒரு காதினில் நல்ல சங்கினாலான வெண்மையான குண்டலத்தை அணிந்தவன்.

**36. ஆற்றுதல் என்பது யாது ?**

ஆற்றுதல் ( இல்வாழ்தல்) என்பது வருந்தி வந்தோர்க்கு உதவுதல் .

**37. பண்பு எனப்படுவது யாது ?**

பண்பு எனப்படுவது சான்றோர்வழி அறிந்து நடத்தலாகும்.

**38. அறிவு எனப்படுவது யாது?.**

அறிவு எனப்படுவது அறிவற்றவர் கூறும் சொற்களைப் பொறுத்துக்கொள்ளுதலாகும்.

**39. கலம்பக நூல்களுள் முதல் நூல் எது?**

நந்திக்கலம்பகம்.

**40. நந்திக்கலம்பக உறுப்புகள் நான்கினை எழுதுக.**

அம்மானை, ஊசல், மறம், தவம்.

**41. நந்திக்கலம்பகம் யார் மீது பாடப்பெற்றது?**
பல்லவ மன்னன் மூன்றாம் நந்தி வர்மன் மீது பாடப்பெற்றது.

**42. நந்திவர்மன் வீரம் எத்தகையது?.**
அறிவில்லாத பகையரசர் நந்தியின் தாமரை போன்ற திருவடிகளை வணங்காவிடில், அவர் கொல்லப்பட்டு தேவர் உலகம் செல்வர்.

**43. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன?.**
நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்.

**44. குலசேகரர் எவ்வெம் மொழிகளில் வல்லவர்?**
- ❖ வடமொழி (சமற்கிருதம்)
- ❖ தென்மொழி (தமிழ்)

## உரைநடை

### குறுவினாக்கள் - வினா எண். 28 முதல் 34 வரை

**1. உலகில் உள்ள மொழிகளுள் இலக்கிய இலக்கண வளமுடைய மொழிகள் எத்தனை?**
உலகில் உள்ள மொழிகளுள் இலக்கிய இலக்கண வளமுடைய மொழிகள் மூவாயிரம் ஆகும்.

**2. தொல்காப்பியம் குறித்து முனைவர் எமினோ கூறுவது யாது?**
இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகின்றது என டாக்டர் எமினோ கூறுகிறார்.

**3. மொழிக்குரிய செவ்வியல் தன்மைகள் யாவை?**
தொன்மை, முன்மை, நுண்மை, திண்மை, எண்மை, ஒண்மை, இனிமை, தனிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, மும்மை, செம்மை, இயன்மை, வியன்மை.

**4. ஒரு மொழி நிலைப்பெற்று நிற்பதற்குரிய தகுதிப்பாடுகள் யாவை?**
பேச்சு மொழியாக, எழுத்து மொழியாக, ஆட்சி மொழியாக, நீதிமன்ற மொழியாக பயிற்று மொழியாக நிலைபெற்றிடல் வேண்டும்.

**3. தமிழ்மொழியின் தனித்தன்மைகளை எழுதுக.**
- ❖ இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது.
- ❖ தமிழர் அகம்,புறம் என்று வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தனர்.
- ❖ திருக்குறள், மாந்தர் இனத்திற்கே வாழ்வியல் நெறிமுறைகளை வகுத்தளித்தது.

**5. மொழி மாற்றம் என்றால் என்ன?**
ஒரு மொழிப் படத்தை மற்ற மொழிகளில் மாற்றி அமைக்கும் முறைக்கு மொழிமாற்றம் என்றுபெயர்.

**6. கல்விப் படங்களின் வாயிலாக நாம் அறிவன யாவை?**
- ❖ பல்வகை விலங்குகளின் வாழ்க்கை
- ❖ பன்னாட்டு மக்களின் வாழ்க்கை
- ❖ நேரில் காண முடியாத இடங்கள்

முதலியவற்றை நாம் கல்விப்படங்களின் வாயிலாக அறியலாம்.

**7. செய்திப் படங்கள் மூலமாக நாம் அறிவன யாவை?**
உலகில் பல்வேறு பகுதிகளில் நடக்கும் நிகழ்ச்சிகளைச் செய்திப் படங்கள் மூலமாக நாம் அறியலாம்.

**8. திரைப்படச்சுருள் பற்றி நீவீர் அறிவன யாவை?**
- ❖ திரைப்படம் எடுக்கப் பயன்படும் படச்சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.
- ❖ படம் எடுக்கப் பயன்படும் சுருள், எதிர்ச்சுருள் எனப்படும்.

**9. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட பகுதிகள் யாவை?**
❖ குமரி மலை ❖ குமரி ஆறு ❖ ப.்றுளி ஆறு

**10. ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?**

❖ பட்டினப் பாலை ❖ மதுரைக்காஞ்சி

**11. ஞாலம் - பெயர்க் காரணம் கூறுக.**

❖ 'ஞாலம்' என்னும் தமிழ்ச்சொல் 'ஞால்' என்னும் சொல்லடியாகத் தோன்றியது.

❖ 'ஞால்' என்பதற்கு தொங்குதல் என்று பொருள்.

❖ உலகம் அண்ட வெளியில் தொங்கிக் கொண்டிருப்பதை இ∴து உணர்த்துகிறது.

**12. மருந்தில்லா மருத்துவம் பற்றி திருவள்ளுவர் கூறுவது என்ன?**

❖ உடலில் வாதம், பித்தம், சீதம், ஆகிய மூன்றும் சமநிலையில் இருக்க வேண்டும்.

❖ அச்சமநிலை தவறும்போது நோய் ஏற்படும் என திருவள்ளுவர் கூறுகிறார்

**3. அமெரிக்க இதழாசிரியரிடம் காந்தியடிகள் பற்றிப் பெண்மணி கூறியது யாது?**

❖ 'உலகில் இன்று காந்தியடிகள் இல்லை.

❖ ஆனால் அவர் விட்டுச்சென்ற காந்தியக் கொள்கைகள் இன்றும் உலகை வழிநடத்திச் செல்கின்றன' என்று அமெரிக்க இதழாசிரியரிடம் காந்தியடிகள் பற்றிப் பெண்மணி கூறினார்.

**14. காந்தியடிகளை கவர்ந்த குஜராத் பாடலின் கருத்து யாது?**

❖ தாகத்திற்கு நீர் தருவதில் ஒன்றும் இல்லை. ❖ தீமை செய்தவற்கும் நன்மையே செய்.

❖ உண்மைப் பொருண்மை உண்டு.

**15. இயேசுவின் மலைப் பொழிவு நூலைப் படித்து காந்தியடிகள் உணர்ந்தது என்ன?**

❖ தீயவனை எதிர்க்காதே! அவனிடமுள்ள தீமையை எதிர்த்து நில்

❖ பகைவனிடமும் அன்பு பாராட்டு

என்னும் கருத்துக்கள் காந்தியடிகளிடம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தின.

**16. காந்தியடிகளுக்கு இளம்பருவத்திலேயே இயல்பாக அமைந்த உயர் பண்புகள் யாவை?**

❖ அன்பு ❖ உண்மை ❖ உறுதி ❖ இன்னா செய்யாமை

ஆகிய உயர்பண்புகள் காந்தியடிகளுக்கு இளம்பருவத்திலேயே இயல்பாக அமைந்தன.

**17. காந்தியடிகளின் அறவழிப் போராட்டத்தில் உருவான இயக்கங்கள் யாவை?**

❖ கதர் இயக்கம் ❖ மது விலக்கு ❖ தீண்டாமை ஒழிப்பு

- ஆகியன காந்தியடிகளின் அறவழிப் போராட்டத்தில் உருவான இயக்கங்கள் ஆகும்.

**18. காந்தியடிகள் எதனைப் பாவம் என்கிறார்?**

❖ இந்தியாவில் கோடிக்கணக்கான மக்கள் உண்ண உணவும், உடுக்க உடையும் இன்றி வாழ்கின்றனர்.

❖ அந்நிலையில் மன்னர்களும், செல்வந்தர்களும் விலை மதிப்புள்ள அணிகலன்களை அணிந்துக் கொண்டு பகட்டாக வாழ்வது பாவம் என்கிறார் காந்தியடிகள்.

**19. இந்தியாவின் வாழ்வு குறித்துக் காந்தியடிகள் கூறுவது யாது?**

❖ இந்தியாவின் வாழ்வு என்பது இலட்சக்கணக்கான கிராமங்களின் வாழ்வுதான்.

❖ அந்த கிராமங்களின் வாழ்வு, அந்த நாட்டின் உழவர்கள், இளைஞர்கள் ஆகியோர் கைகளில்தான் உள்ளது, என்கிறார் காந்தியடிகள்.

**20. இராமலிங்கர் எங்கு? எப்போது பிறந்தார்?**

❖ கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் உள்ள மருதூரில் பிறந்தார்.

❖ பிறந்த தேதி 5.10.1823

**21. இராமலிங்கர் புதுநெறிக் கண்ட புலவர் எனப் போற்றப்படக் காரணம் என்ன?**

மக்கள் அறியாமை நீங்கி அறிவு ஒளி பெற சோதி தரிசனப் புதுமையைப் புகுத்தினார்.

**22. வள்ளலாரின் முழக்கம் யாது?**

"அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை" என்பதே வள்ளலாரின் முழக்கம் ஆகும்.

**23. சத்திய தரும சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது?**
- ❖ வடலூரில் சத்திய தரும சாலையை நிறுவினார்.
- ❖ சாதி, மத வேறுபாடின்றிப் பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார்.

**24. ஒவ்வொருவரும் குறைந்தது எக்கல்வித் தகுதியினைப் பெறுதல் வேண்டும்?**
ஒவ்வொருவரும் குறைந்தது மேல்நிலைக் கல்வித் தகுதியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**25. தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில்நுட்பத் துறைகள் யாவை?**
- ❖ உயிரி தொழில்நுட்பம்
- ❖ நுண்ணியல் தொழில்நுட்பம்

**26. பட்டப் படிப்புகளில் எவையேனும் நான்கினை எழுதுக.**
1. பி.லிட் – தமிழ்
2. பி.ஏ. – ஆங்கிலம்
3. பி.எஸ்.சி. – கணிதம்
4. பி.காம். – வணிகவியல்

ஆகியன நான்கும் பட்டப் படிப்புகள் ஆகும்

## செய்யுள் பகுதி சிறு வினாக்கள் - வினா எண். 35 முதல் 39 வரை

**1 வாயிற்காவலன் பாண்டிய மன்னனை எவ்வாறு வாழ்த்தினான்?**
- ❖ 'கொற்கை என்னும் துறைமுகத்தை உடைய பாண்டிய மன்னனே வாழ்வாயாக!
- ❖ தெற்குப் பகுதியில் உள்ள பொதியமலைக்கு தலைவனே வாழ்க! செழியனே வாழ்க!
- ❖ தமிழ்நாட்டின் தென்பகுதித் தலைவனே வாழ்க!
- ❖ பழிச்சொற்கள் சேராத பஞ்சவனே வாழ்க!'

என வாயிற்காவலன் பாண்டிய மன்னனை வாழ்த்தினான்.

**2 கண்ணகி குறித்து வாயிற்காவலன் கூறியவற்றை எழுதுக?**
- ❖ 'வெற்றிதரும் வேலினை கையில் ஏந்தி, பிடர்தலை பீடத்தில் ஏறிய கொற்றவையும் அல்லள்;
- ❖ இறைவனை நடனமாடச் செய்த பத்ரகாளியும் அல்லள்;
- ❖ காட்டை இடமாகக் கொண்ட காளியும் அல்லள்;
- ❖ தாருகன் மார்பை பிளந்த துர்கையும் அல்லள்;
- ❖ பொற்சிலம்பு ஒன்றை கையில் ஏந்தியவளாய் சினம் கொண்ட பெண் ஒருத்தி நம் வாயிலின் முன்னே நிற்கிறாள்'

என்று வாயிற் காவலன் கண்ணகியின் தோற்றம் குறித்து பாண்டிய மன்னனிடம் கூறுகிறான்.

**3 சிலப்பதிகாரம் காட்டும் சோழநாட்டு மன்னர்களின் சிறப்புகள் யாவை?**

**✠ சிலப்பதிகாரம் காட்டும் சோழநாட்டு மன்னர்களின் சிறப்பு**

சிலப்பதிகாரத்தில் சிபி மன்னன் மற்றும் மனுநீதிச்சோழனின் சிறப்புகள் கூறப்பட்டுள்ளது.

**✠ சிபி மன்னன்**

வேடனிடமிருந்து புறாவைக் காப்பதற்காக தன் தசையை அறுத்துக் கொடுத்தும் எடைக்கு எடை சமமாகாததால் தானே துளாக்கோலில் ஏறியவன் சிபி மன்னன்.

**✠ மனுநீதிச்சோழன்**

தன் அரண்மனை மணி ஒலித்ததைக் கேட்டுப் பசுவின் துயரை அறிந்து, தன் ஒப்பற்ற மகனையே தேர்ச்சக்கரத்திலிட்டுக் கொன்றவன் மனுநீதிச்சோழன்.

**4 கண்ணகிக்குப் பாண்டியன் நெஞ்செழியன் கூறிய மறுமொழி யாது?**

**✠ கண்ணகியின் அறிமுகம்**

'வாழ்வதற்காக நின் மதுரை நகரத்துக்கு வந்து, என் காற்சிலம்பினை விற்க முயன்ற போது, உன்னால் கொலைசெய்யப்பட்ட கோவலன் மனைவி' என்று கண்ணகி தன்னை அறிமுகம் செய்து கொள்கிறாள்.

✠ **பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய மறுமொழி**

"கள்வனை கொலை செய்தல் கொடுங்கோலன்று; அதுவே அரச நீதி" என்று பாண்டியன் நெடுஞ்செழியன் கண்ணகியிடம் கூறினான்.

**5 தமிழ் மொழி வளர்ச்சியடைய பாரதிதாசன் கூறும் வழி வகைகள் யாவை?**

- ❖ பல்வேறு துறை நூல்கள் தமிழில் வெளியிட வேண்டும்.
- ❖ தமிழ்மொழியை மதங்களுக்குள் அடக்காமை வேண்டும்.
- ❖ ஊர்தோறும் இலவச நூல் நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும்.
- ❖ தமிழின் பெருமைகளைக் கூறுவதை விடுத்து குறைகளை நீக்கி புதுமைப் படைக்க வேண்டும்.

இவையே தமிழ் வளர்ச்சியடைய பாரதிதாசன் கூறும் வழிமுறைகளாகும்.

**6 செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதற்குப் பாரதிதாசன் கூறும் வழிகள் யாவை?**

- ❖ தமிழ் நூல்களை எளிய நடையில் எழுதுதல் வேண்டும்.
- ❖ இலக்கண நூல்களை புதிதாகப் படைத்தல் வேண்டும்.
- ❖ உலகின் புதிய ஆய்வு சிந்தனைகளை தமிழ்ப்படுத்த வேண்டும்.
- ❖ அவற்றை விளக்கப் படங்களுடன் நூல்களாக்கி செந்தமிழை செழுந்தமிழாய் செய்திட வேண்டும்.

**7 கம்பராமாயணம் - சிறு குறிப்பு எழுதுக.**

✠ **நூல் வரலாறு**

இராமனது வரலாற்றைக் கூறும் நூல் இராமாயணம் எனப்பட்டது. வான்மீகி முனிவர் வடமொழியில் எழுதிய இராமாயணத்தைத் தழுவிக் கம்பர் அதனைத் தமிழில் இயற்றினார். கம்பர் இந்நூலுக்கு 'இராமாவதாரம்' எனப் பெயரிட்டார்.

✠ **பிரிவுகள்**

கம்பராமாணம் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறு காண்டங்களை உடையது.

✠ **சிறப்பு**

திருக்குறளையும் கம்பராமாயணத்தையும் தமிழுக்குக் 'கதி' என்பர் பெரியோர்.

**8 சீதை, இலக்குவன், ஆகியோரிடம் குகனைப்பற்றி இராமன் கூறியதென்ன?**

- ❖ 'குகன் நம்மிடம் நீங்காத அன்பு உடையவனாக இருக்கின்றான்.
- ❖ எல்லாவற்றினும் இனியவனான இவன் நம்முடன் இருக்கட்டும்'

என்று சீதை, இலக்குவன் ஆகியோரிடம் குகனைப் பற்றி இராமன் கூறினான்.

**9 விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை?**

- ❖ 'அன்புள்ளத்துடன் குகன் கொண்டு வந்த இப்பொருள்கள் கிடைப்பதற்கு அரியன.
- ❖ அமுதத்தைவிடச் சிறந்தன.
- ❖ இவை எத்தகையனவாய் இருப்பினும் அன்பு கலந்ததால் தூய்மையானவையே!
- ❖ ஆகையால் இனிமையான இவை, நாங்கள் விரும்பி உண்டதற்குச் சமம்'

என்று விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறினான்.

**10 சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?**

✠ **சான்றோர் நட்பு**

சான்றோர் என்றும் சான்றோருடனே நட்பு கொள்வர்.

✠ **சான்றோர் நட்புக்கு உவமை**

பொன்னும் பவளமும் முத்தும் பெருமலையில் பிறக்கும் மாணிக்கமும், வெவ்வேறு இடங்களில் தோன்றுகின்றன. ஆயினும் மாலையாகக் கோத்து மதிப்புமிக்க அணிகலனாக அமைக்கும்போது, தம்முள் ஒருங்கு சேரும்.

**11 தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல்வழித் தொகுத்து எழுதுக.**

✠ **முன்வினைப் பயன்**

'அரசால் சிறப்புச் செய்யப் பெறுதலும், யானை, தேர், குதிரை முதலிய ஊர்திகளில் அவ்வரசர் முன்னிலையில் விரைந்து செல்லுதலும் செல்வச் சிறப்பன்று. அஃது அவரவர் தம் முன்வினைப் பயனே.

✠ **உண்மையான செல்வம்**

தன்பால் புகலிடம் தேடிவந்த எளியோரைக் கைவிடாமல் காக்கும் மென்மையான பண்பே செல்வமென சான்றோர் கூறுவர்' என்று தலைவனுக்குத் தோழி கூறுகிறாள்.

**12 சீறாப்புராணம் குறிப்பு எழுதுக.**

✠ **பெயர்காரணம்**

சீறா - வாழ்க்கை, புராணம் - வரலாறு. நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றை எடுத்தியம்பும் நூல் என்பது இதன் பொருளாகும்.

✠ **நூல் அமைப்பு**

இந்நூல் விலாதத்து காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜ்ரத்துக் காண்டம் என்னும் முப்பிரிவுகளை கொண்டது. 5027 விருத்தப்பாக்களால் ஆனது.

**13 புலியின் கொடுஞ்செயல்கள் பற்றி உமறுப்புலவர் கூறுவன யாவை?**

- ❖ சிங்கத்தைத் தவிர மற்ற விலங்குகளின் இறைச்சியை உண்ணும்.
- ❖ பெரிய யானைகளின் மார்பினைக் கீறிக் குருதியினைக் குடிக்கும்.
- ❖ பெரிய மலைகளும் அதிரும்படி இடியைக் காட்டிலும் அதிகமாக முழங்கும்.
- ❖ புலி முழங்கும் ஓசையினைக் கேட்டு காட்டெருமைகளும் பன்றிகளும் கரடிகளும் கலைமான்களும் கால் தடுமாறி நிலத்தில் விழுந்து நடுக்கமடையும்.

**14 நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.**

- ❖ முகமது நபி மகிழ்ச்சியுடன் பாதையில் நடந்து வருவதை கண்ட புலி,
- ❖ தனது வாலை வளைத்து கொண்டது.
- ❖ உடல் நடுக்கமுற்று மெல்ல மெல்ல நடந்து வந்தது.
- ❖ குளிர்ச்சி தங்கிய தளிர்போலும் திருவடிக் காட்சி கிடைத்ததென்று, பணிந்து வணங்கியது.

**15 சாதனைப்பூக்கள் என்று எவற்றைச் சாலையார் சுட்டுகிறார்?**

வாழ்க்கையாகிய வழித் தடங்கள் குப்பைக் கூளங்களால் அடைபடுமுன் விரைந்து சென்று, கண்களையும் காதுகளையும் துணையாகக் கொண்டு மன உறுதியுடன் விண்ணையும் கடந்து வெற்றிக் கொள்பவர்களை சாதனைப் பூக்கள் என்று சாலையார் சுட்டுகிறார்

## உரைநடைப் பகுதி-சிறு வினாக்கள் - வினா எண்.40 முதல் 44 வரை

**1. பெண்கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துகள் யாவை?**

- ❖ 'நமது சமுதாயத்தில் பெண்கள் சார்ந்த தலைகீழான ஒரு புரட்சி ஏற்பட்டாலொழிய, பெரிய மாறுதல்களைக் கொண்டு வரவியலாது.
- ❖ பெண்கள் மனிதப் பிறவிகளாய் நடமாட வேண்டுமானால் அடுப்பங்கரையை விட்டு வெளியேற வேண்டும்.
- ❖ பெண்கள் கல்வி கற்றாலொழிய சமூகத்தில் மாற்றங்கள் ஏற்படாது.
- ❖ ஆண்கள் பெண்களை படிக்க வைக்க வேண்டும்.
- ❖ ஆராய்ச்சிப் படிப்பும் தாராளமாய்க் கொடுக்கப்பட வேண்டும் என்று பெண்கல்வி பற்றி பெரியார் எடுத்துக் கூறுகிறார்.

**2. பெண்ணுரிமையை விளக்குக?**

- ❖ 'ஆணுக்குப் பெண் இளைப்பில்லை' என்பதை உணர வேண்டும்.
- ❖ பெண்கள் தத்தம் கணவனுக்கு மட்டும் உழைக்கும் அடிமைகளாக இருக்கக் கூடாது.
- ❖ மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றும் புகழ் பெற்ற பெண்மணிகளாக விளங்கவேண்டும்.
- ❖ பெண்களுக்கு சொத்துரிமை வழங்கப்பட வேண்டும்.

**3. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை?**

✠ **பெற்றோர்களின் மனப்போக்கு**

தமிழர்களிடையே இன்று பரவியுள்ள ஒரு பெருநோய் மணக்கொடை. தன் மகனுக்காக செலவழித்தப் பணத்தை தொழிலில் போட்ட முதலீடாக கருதி, அவற்றை வரப்போகும் மனைவியிடம் பெற்றுவிட வேண்டுமென்று துடிக்கின்றனர்.

✠ **இன்றைய இளைஞர்களிடையே ஏற்பட வேண்டிய மாற்றம்:**

அன்பும் தியாக உணர்ச்சியும் இருந்தால்தான் இம்மாதிரியான கொடுமைகளை ஒழிக்க இயலும். தமிழ்நாட்டு இளைஞர்கள் செக்கு மாடுகளாக இல்லாமல், பந்தயக்குதிரைகளாக மாறவேண்டும். தாமே முன்னேற வேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம் நம் இளைஞர்களிடையே வளரவேண்டும்.

**4. அம்பேத்கர் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை?**

❖ 1908இல் எல்பின்ஸ்டன் பள்ளியில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பு.
❖ 1912இல் பம்பாய் எலபின்ஸ்டன் கல்லூரியில் இளங்கலைப் பட்டம்.
❖ 1915இல் முதுகலைப் பட்டம்.
❖ 1916இல் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம். ஆகியவை அம்பேத்கார் பெற்ற கல்வித் தகுதிகளாகும்.

**5. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது?**

❖ அம்பேத்கர், 1946ஆம் ஆண்டு மக்கள் கல்விக் கழகத்தைத் தோற்றுவித்தார்.
❖ மும்பையில், அவரது அரிய முயற்சியால் உருவான சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தில் இன்றைய அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

**6. பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும்?**

❖ கேட்போரை தன்வயப்படுத்தும் முறையில் பேச்சைத் தொடங்குதல் வேண்டும்.
❖ அவையில் இருப்போரை விளித்துச் சுருக்கமான முன்னுரையுடன் பேசத் தொடங்குவதே சிறப்புடையது.
❖ பேசத் தொடங்கிய ஓரிரு மணித்துளிகளில் பேசப்போகும் பொருளில் புகுந்துவிடுவது பாராட்டுக்குரியது.
❖ இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்பத் தொடக்கவுரை அமைதல் நன்று.

**7. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.**

❖ பேச்சின் சுருக்கத்தைக் கூறி முடித்தல்,
❖ உணர்ச்சியைத் தூண்டும் முறையில் முடித்தல்,
❖ பாராட்டி முடித்தல்,
❖ பொருத்தமான கவிதைக் கூறி முடித்தல்

என முடிக்கும் முறைகள் பல உள்ளன. சிறந்த பேச்சாளர் எப்படி முடித்தாலும் அழகுறவே அமையும்.

**8. பேச்சுக்கலையில் மொழியும் முறையும் எவ்வாறு அமைதல் வேண்டும்?**

✠ **மொழி அமைப்பு**

மின்சாரம் பாய கம்பி கருவியாக இருப்பதுபோலக் கருத்தை விளக்க மொழி கருவியாக உள்ளது. ஆதலால் பேசும் மொழி அழகுடையதாகவும் தெளிவாகவும் சிக்கலற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

✠ **பேசும் முறை**

சொல்லை ஆராய்ந்து அறிந்து அளவாகப் பயன்படுத்துதல் வேண்டும். சொற்கள் கிடைக்கிறதே என்று கொட்டிவிடுதல் கூடாது. செய்தியை விரைவாக சொல்லுதல் கூடாது. திரும்ப திரும்ப சொல்லுதல் தவறு. மிகைப்பட பேசுதல் கூடாது.

**9. கடல் வாணிகம் குறித்து எழுதுக.**

- தமிழர்கள் கடல் வாணிகத்தில் தலைசிறந்திருந்தனர்.
- பொன்னும், முத்தும், துகிலும் கொண்டு கடல் வாணிகம் செய்தனர்.
- கிறித்து பிறப்பதற்கு முன்பே கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து ஆகிய நாடுகளுடன் அரிசியும், மயில் தோகையும், சந்தனமும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன.
- கி.மு. 10ஆம் நூற்றாண்டில் அரசன் சாலமனுக்கு யானைத் தந்தமும், மயில் தோகையும், வாசனைப் பொருட்களுடம் அனுப்பப்பட்டன.
- தமிழர்கள் சாவக நாட்டுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்.

**10. உழவுத்தொழில் குறித்து எழுதுக.**

- 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர்' என்கிறது திருக்குறள்.
- தமிழர், உழுது பயிர் செய்து உலகைக் காக்கும் உழவுத்தொழிலைப் பெரிதும் போற்றினர்.
- 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்னும் பழமொழி இன்றும் தமிழர்களால் போற்றப்படுகிறது.
- உழவுக்குச் சிறப்புப் பெற்ற மருதநிலம் வயலும் வயல் சார்ந்த இடமாக வகைப்படுத்தனர்.
- மருத நிலத்தின் பெருமை கருதியே வேந்தனை முதன்மைப் படுத்தினர் தமிழர்.

**11. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது? விளக்குக.**

✠ **காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம்**

காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் அரிச்சந்திரன் நாடகம்.

✠ **கவரக் காரணம்**

அரிச்சந்திரன் உண்மையை மட்டுமே பேசும் அரசன். அவனை பொய் பேசவைக்க வேண்டும் என்பதற்காக பல இன்னல்களைத் தருகிறார் விசுவாமித்திரர். அதனால், அரிச்சந்திரன் நாட்டையும் மனைவியையும் ஒரே மகனையும் இழந்து சுடுகாட்டில் பணிபுரிகிறான்.

✠ **காந்தியடிகளின் முடிவு**

அவனது வாய்மையை நாடகம் வாயிலாக உணர்ந்த காந்தியடிகள், தாம் ஒரு சத்தியவானாக இருக்கவேண்டும் என்று உறுதிகொண்டார்.

**12. மனிதநேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?**

✠ **மனிதாபிமானம்**

"என்னைப் பொருத்தவரையில் தேசாபிமானமும் மனிதாபிமானமும் ஒன்றுதான். நான் ஒரு தேசபக்தன். அதற்கு காரணம் நான் மனிதனாக இருப்பதும், அதற்குமேல் மனிதாபிமானியாக இருப்பதும்தான்" என்று காந்தியடிகள் கூறுகிறார்.

✠ **மனிதத்தன்மை**

மனிதர் மொழியாலும் நாட்டாலும் உணர்த்தப்படுவதனைக் காட்டிலும் மனதத்தன்மையால் உணர்த்தப்படுவதே சிறப்பு என்கிறார். நான் ஒரு குஜராத்தியனாக இருப்பதைக் காட்டிலும், இந்தியனாக இருப்பதைக் காட்டிலும், மனிதனாக இருப்பதே பெருமைக்குரியது என்று கூறுகிறார்.

## செய்யுளைப் படித்து வினாக்களுக்கு விடையளி - வினா எண். 45

1."அரிகால் மாறிய அங்கண் அகல்வயல்
மறுகால் உழுத ஈரச் செறுவின்
வித்தொடு சென்ற வட்டி பற்பல
மீனொடு பெயரும் யாணர் ஊர"

| **வினாக்கள்** | **விடைகள்:** |
|---|---|
| 1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? | **நற்றிணை** |
| 2. அரி - பொருள் கூறுக. | **நெற்கதிர்** |
| 3. அங்கண் - பிரித்து எழுதுக. | **அம் + கண்** |

4. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூலின் ஆசிரியர் யார்? **மிளைகிழான் நல்வேட்டனார்**
5. இப்பாடலில் அமைந்துள்ள அடி எதுகைகளை எழுதுக. **அரிகால், மறுகால் வித்தொடு, மீனொடு**

2. அரியா சனமுனக்கே யானால் உனக்குச்
சரியாரும் உண்டோ தமிழே - விரிவார்
திகழ்பா ஒருநான்குஞ் செய்யுள்வரம் பாகப்
புகழ்பா வினங்கள்மடைப் போக்கா - நிகழவே

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது ? **தமிழ்விடு தூது**
2. இப்பாடலில் உனக்கு என்பது எதைக் குறிக்கும்? **தமிழைக் குறிக்கும்.**
3. நான்கு வகைப் பாக்கள் யாவை? **வெண்பா, ஆசிரியப்பா கலிப்பா, வஞ்சிப்பா.**
4. இப்பாடலில் பயின்று வந்துள்ள அடியெதுகைகளை எடுத்து எழுதுக.
   **அரியாசனம் - சரியாரும், திகழ்பா - புகழ்பா**
5. அரியாசனம் பொருள் தருக. **சிங்காதனம்.**

3. நல்லேரி னால்செய்யுள் நாற்கரணத் தேர்பூட்டிச்
சொல்லேர் உழவர் தொகுத்தீண்டி - நல்லநெறி
நாலே விதையா நனிவிதைத்து நாற்பொருளும்
மேலே பலன்பெறச்செய் விக்கநாள் - மேலோரில்

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? **தமிழ்விடு தூது**
2. இந்நூலின் ஆசிரியர் யார? **அறியப்படவில்லை.**
3. நாற்கரணங்கள் யாவை? **மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.**
4. சொல்லேர் உழவர் யார்? **புலவர்கள்**
5. இப்பாடலில் அமைந்துள்ள அடி எதுகைகளை எடுத்து எடுதுக.
   **நல்லேரினால் - சொல்லேர், நாலே - மேலே**

4. பாத்தனதாக் கொண்டபிள்ளைப் பாண்டியன் வில்லிஒட்டக்
கூத்தனிவர் கல்லாது கோட்டிகொளும் - சீத்தையாரைக்
குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்
வெட்டிக் களைபறிக்க மேலாய்த்தூர் - கட்டி

வினாக்கள்:
1. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது? **தமிழ்விடு தூது**
2. இப்பாடலில் வரும் புலவர்கள் பெயர்களை எழுதுக.
   **அதிவீரராம பாண்டியன், வில்லிபுத்தூரார் ஒட்டக்கூத்தர்,**
3. போலிப் புலவர்களைத் தலையில் குட்டுபவர் யார்? **அதிவீரராம பாண்டியன்.**
4. சீத்தையர் - பொருள் கூறுக. **கீழானவர், போலிப்புலவர்**
5. இப்பாடலில் அமைந்துள்ள அடியெதுகைகளை எடுத்து எழுதுக.
   **பாத்தனதாக் - கூத்தனிவர், குட்டி, வெட்டி.**

5. தித்திக்கும் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப் படுந்தேனே உன்னோ டுவந்துரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்.

**வினாக்கள்:**
1. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது **தமிழ்விடு தூது**
2. முத்தமிழ் விரித்தெழுதுக. **இயல், இசை, நாடகம்.**
3. விளம்பக்கேள் பொருள் கூறுக. **சொல்லக் கேட்பாயாக.**

4. உன்னோடுவந்துரைக்கும் பிரித்து எழுதுக. **உன்னோடு + உவந்து + உரைக்கும்**
5. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைகளை எடுத்து எழுதுக.
**தித்திக்கும் - முத்தி, உண்ணப்படும் - விண்ணப்பம்**

6. குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்
வெட்டிக் களைபறிக்க மேலாய்த்தூர் - கட்டி
வளர்ந்தனை பால்முந்திரிகை வாழைக் கனியாய்க்
கிளர்ந்தகரும் பாய்நாளி கேரத்து - இளங்கனியாய்த்

| **வினாக்கள்** | **விடைகள்** |
|---|---|
| 1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? | **தமிழ்விடு தூது** |
| 2. இப்பாடலின் ஆசிரியர் பெயர் யாது? | **அறியவில்லை** |
| 3. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைகளை எழுதுக. | **குட்டி, வெட்டி**<br>**வளர்ந்தனை, கிளர்ந்தகரும்** |
| 4. செவியறுத்து - பிரித்து எழுதுக. | **செவி + அறுத்து** |
| 5. நாளிகேரம் - பொருள் எழுதுக. | **தென்னை** |

7. ஆற்றுதல் என்பது ஒன்று அலர்ந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடுஅறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை

| **வினாக்கள்:** | **விடைகள்** |
|---|---|
| 1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? | **கலித்தொகை** |
| 2. இப்பாடலின் ஆசிரியர் யார்? | **நல்லந்துவனார்** |
| 3. கிளை - பொருள் எழுதுக. | **சுற்றம்** |
| 4. அன்பெனப்படுவது - பிரித்து எழுதுக. | **அன்பு + எனப்படுவது** |
| 5. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைகளை எழுதுக. | **ஆற்றுதல், போற்றுதல்**<br>**பண்பெனப் படுவது, அன்பெனப் படுவது** |

8. சாதனைப் பூக்களை ஏந்துமுன்னே - இங்கு
நல்ல செடி இளைப்பாறிடுமோ?
வேதனை யாவும் மறந்ததுபார் - செடி
வெற்றி கொண்டேந்திய பூவினிலே.

| **வினாக்கள்** | **விடைகள்** |
|---|---|
| 1. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது? | **பூத்தது மானுடம்** |
| 2. இப்பாடலின் ஆசிரியர் யார்? | **சாலை இளந்திரையன்** |
| 3. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைகளை எடுத்து எழுதுக. | **சாதனை, வேதனை** |

4. சாதனைப் பூ எது?
**விடா முயற்சியும் மனவுறுதியும் கொண்டு வெற்றி கொள்வர்களை சாதனைப் பூ என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்**
5. செடி எப்போது இளைப்பாறுகிறது? **சாதனைப் பூக்களை மலர வைத்தப்பின்.**

## உரைநடைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளி (வினா எண். 46)

1. ஆய கலைகள் அறுபத்து நான்கு என்பர். அத்தகைய கலைகளுள் பேச்சுக் கலையும் ஒன்று. இது, நுண்ணிய நூல்பல கற்றவர்க்கே அமையத்தக்க அரியதொரு கலை. இது, மக்களுக்கு அறிவு புகட்டி அவர்களை உயர்ந்த இலட்சியப் பாதையிலே அழைத்துச் செல்லும் வன்மையுடையது. மேடைப் பேச்சில் நல்ல தமிழைக் கொண்டு மக்களை ஈர்த்தோர் தமிழ்த்தென்றல் திரு.வி.க. பேறிஞர் அண்ணா, ரா.பி.சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், குன்றக்குடி அடிகளார் முதலியோர் ஆவர்.

**வினாக்கள்:**

1. **ஆய கலைகள் எத்தனை?**
   ஆய கலைகள் அறுபத்து நான்கு என்பர்.
2. **நுண்ணிய நூல்பல கற்றவர்க்கு அமையத்தக்க கலை எது?**
   பேச்சுக் கலை
3. **மேடைப்பேச்சில் மக்களை ஈர்த்தோர் யாவர்?**
   தமிழ்த்தென்றல் திரு.வி.க., பேரறிஞர் அண்ணா, ரா.பி.சேதுபிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், குன்றக்குடி அடிகளார்.
4. **பேச்சுக் கலையின் வன்மை யாது?**
   மக்களுக்கு அறிவு புகட்டி உயர்ந்த இலட்சியப் பாதையிலே அழைத்துச் செல்லும் வன்மையுடையது.
5. **இப்பகுதிக்கு ஏற்றத் தலைப்பு ஒன்று தருக.**
   பேச்சுக்கலை

2. இராமலிங்கர் அருளிய பாடல்கள் அருட்கருணை நிறைந்தவை. ஆறு தொகுதிகள் கொண்ட இவரது பாடல்களைத் திருவருட்பா என மக்கள் போற்றுகின்றனர். இவர் உருவ வழிபாட்டை நீக்கி, ஒளிவழிபாட்டை மக்களைப் பின்பற்றச் செய்தார். அதற்காகவே வடலூரில் சத்திய ஞானசபையை நிறுவினார். மேலும் மக்கள் அறியாமையை நீங்கி அறிவு ஒளிபெற, அங்கே சோதிதரிசனப் புதுமையைப் புகுத்தினார். இதனால்தான் பாரதியார். இவரைப் 'புதுநெறி கண்ட புலவர்' என்று போற்றினார்.

**வினாக்கள்:**

1. **இராமலிங்கர் அருளிய பாடல்கள் எப்படி அழைக்கப்பட்டன?**
   இராமலிங்கர் அருளிய பாடல்கள் திருவருட்பா என அழைக்கப்பட்டன.
2. **திருவருட்பா எத்தனைத் தொகுதியுடையது?**
   திருவருட்பா ஆறு தொகுதிகளை உடையது.
3. **உருவ வழிபாட்டுக்குப் பதிலாக எந்த வழிபாட்டைப் பின்பற்றினார்?**
   உருவ வழிபாட்டுக்குப் பதிலாக ஒளிவழிபாட்டை பின்பற்றினார்.
4. **சத்திய ஞான சபை எங்கு நிறுவப்பட்டது?**
   சத்திய ஞான சபை வடலூரில் நிறுவப்பட்டது.
5. **இராமலிங்கரை பாரதியார் எப்படிப் போற்றினார்?**
   புதுநெறி கண்ட புலவர் என்று போற்றினார்.

## செய்யுள் - நெடுவினாக்கள் - வினா எண். 47

1 **ஒழுக்கமுடைமைப்பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக?**

✠ **ஒழுக்கத்தின் உயர்வு**

- ❖ ஒழுக்கம் ஒருவர்க்கு அனைத்து சிறப்புகளையும் தருவதால், அது உயிரினும் மேலாகக் கருதப்படும்.
- ❖ ஒழுக்கமே சிறந்த துணையாகும். எனவே அதை எப்பாடுபட்டாவது விரும்பி காக்க வேண்டும்.

✠ **ஒழுக்கத்தின் குணமும், ஒழுக்கமின்மையால் ஏற்படும் குற்றமும்.**

- ❖ ஒழுக்கம் உள்ளவர் உயர் குடியினர். ஒழுக்கம் இல்லாதவர் இழி குடியினர்.
- ❖ ஒருவன் தான் கற்றக் கல்வியை மறந்தால் மீண்டும் கற்றுக் கொள்ள இயலும். ஆனால் ஒழுக்கம் குறைந்தால் குடிபிறப்பின் சிறப்பு கெடும்.
- ❖ பொறாமை உள்ளவனிடம் செல்வம் இருக்காது. அதுபோல, ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு இருக்காது.
- ❖ ஒழுக்கம் தவறுதலால் ஏற்படும் குற்றங்களை உணர்ந்தவர்கள், அவ்வொழுக்க நெறியிலிருந்து சிறிதும் விலக மாட்டார்கள்.
- ❖ ஒழுக்கமுடையவர்கள் மேன்மை அடைவர். ஒழுக்கமில்லாதவர்கள் அடையக்கூடாத பழியை அடைவர்.

**ஒழுக்கத்தின் விளைவு**

- நல்லொழுக்கம் நன்மை என்னும் விளைவைத் தரும். தீயொழுக்கம் துன்பத்தை விளைவாகத் தரும்.

**சொல்லாலும் செயலாலும் வரும் ஒழுக்கம்**

- நல்லொழுக்கம் உடையவர்களால் தவறியும் தீமைதரும் சொற்களைச் சொல்ல இயலாது.
- உயர்ந்தாரோடு பொருந்த வாழும் கல்வியைக் கல்லாதவர், எவ்வளவுதான் கற்றிருந்தாலும் கல்லாதவரே ஆவர்.

**2 காலமறிதலை வள்ளுவர் வழி நின்று விளக்குக.**

**காலமறிதலின் சிறப்பு**

- பகற்பொழுதில் தன்னைவிட வலிமையான கோட்டானைக் காக்கை வென்றுவிடும். அதுபோலப் பகை வெல்லக் கருதும் அரசன், ஏற்ற காலம் அறிந்து செயல்படவேண்டும்.

**காலமறிதலின் பயன்**

- காலத்திற்கு பொருந்திய செயலை செய்வதே செல்வத்தை நீங்காமல் கட்டும் கயிராகும்.
- தகுந்த கருவிகளோடு ஏற்ற காலம் அறிந்து செயல்பட்டால், செய்தற்கரிய செயல்கள் எதுவும் இல்லை.
- காலமறிந்து இடத்தோடு பொருந்த செயல்பட்டால் உலகத்தையே அடைய விரும்பினும் கைகூடும்.

**காத்திருத்தலின் சிறப்பு**

- உலகம் முழுவதையும் ஆளக் கருதுபவர், அதற்குரிய காலத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பர்.
- ஊக்கமுடையவன் காலத்தை எதிர்பார்த்து அடங்கியிருப்தானது, ஆட்டுக்கடா பகையைத் தாக்குவதற்குப் பின்வாங்கும் தன்மையைப் போன்றது.

**பகைவரை எதிர்கொள்ளும் முறை**

- அறிவுடையார், பகைவர் தீங்கு செய்த உடனே சினத்தை வெளிக்காட்டாமல், காலம் வரும்வரை காத்திருப்பர்.
- பகைவரைக் காணும் போது பணிவாக இருத்தல்வேண்டும். அப்பகைவருக்கு முடிவுக்காலம் வரும்போது, அவர்தம் நிலைமை தலைகீழாய் மாறிவிடும்.

**விரைந்து செயல்முடித்தல்**

- அரிய வாய்ப்பு கிடைக்கும் போது, அதை பயன்படுத்தி செயற்கரிய செயல்கள் செய்தல் வேண்டும்.

**காத்திருந்து செயல்படுதல்**

- வாய்ப்பற்ற காலத்தில் கொக்கைப்போல அமைதியாக இருத்தல் வேண்டும். வாய்ப்பு கிடைக்கும் போது விரைந்து செயலை முடித்தல் வேண்டும்.

**3 'தேரா மன்னா' என விளித்துக் கண்ணகி கூறியன யாவை?**

**தேரா மன்னா என விளித்து கண்ணகி கூறியவை**

"நீரொழுகும் கண்களுடன் எம்முன் நிற்கும் பெண்ணே நீ யார்?" என மன்னன் கண்ணகியிடம் வினவினான். கண்ணகி மன்னனை நோக்கி "ஆராய்ந்து அறிந்து நீதி வழங்காத மன்னனே உன்னிடம் கூறுவது ஒன்று உண்டு" என உரைக்கத் தொடங்கினாள்.

**புகார் நகரின் சிறப்பு**

"புறாவின் துன்பத்தைப் போக்கிய சிபி மன்னனும், தன் அரண்மனை மணி ஒலித்ததைக் கேட்டு பசுவின் துன்பத்தை அறிந்து, தன் ஒப்பற்ற மகனையே தேர்ச்சக்கரத்திலிட்டுக் கொன்ற மனுநீதி சோழனும் வாழ்ந்த, பெரும்புகழுடைய புகார் நகரம் யான் பிறந்த ஊர்" என்று தனது ஊரின் பெருமையினை கண்ணகி கூறினாள்.

**கண்ணகியின் அறிமுகம்**

"சிறப்பு பொருந்திய புகார் நகரத்தில் பிறந்த மாசாத்துவானின் மகனை மணம் புரிந்தேன். ஊழ்வினைப் பயனால், நின் மதுரை நகர் வந்து, காற்சிலம்பை விற்க முயன்றபோது, உன்னால் கொலைசெய்யப்பட்ட கோவலன் மனைவி நான், கண்ணகி என்பது என் பெயர்" என்று கூறினாள்.

✠ **பாண்டியனின் மறுமொழி**

"கள்வனைக் கொலை செய்தல் கொடுங்கோலன்று; அதுவே அரச நீதி" என்று பாண்டிய மன்னன் கண்ணகிக்கு மறுமொழி கூறினான்.

✠ **கண்ணகி காற்சிலம்பை உடைத்தல்**

கண்ணகி தன் காற்சிலம்பு மாணிக்கப் பரல்களைக் கொண்டது என்றாள். அதற்கு பாண்டிய மன்னன் எம்முடைய காற்சிலம்பில் முத்துப் பரல்கள் கொண்டது எனக் கூறி கோவலனிடமிருந்து கைப்பற்றிய காற்சிலம்பை கொண்டு வரச் செய்தான். அந்த காற்சிலம்பினை கண்ணகி எடுத்து ஓங்கி உடைத்தாள். அதிலிருந்து மாணிக்கப் பரல்கள் மன்னனின் உதட்டில் பட்டுத் தெறித்தது.

✠ **மன்னன் உண்மை அறிதல்**

மாணிக்கப் பரல்கண்ட மன்னன், "பொற்கொல்லன் சொல் கேட்டு நீதி தவறிய, நானோ அரசன்! நானே கள்வன்; அறந்தவறாது குடிமக்களைக் காக்கும் தொன்மையாட்சி என்முதல் தவறியது. என் வாழ்நாள் அழியட்டும்" என்றவாறே மயங்கி வீழ்ந்தான். கோப்பெருந்தேவியும் மன்னனின் திருவடிகளை வணங்கி நிலத்தில் வீழ்ந்து இறந்தாள்.

4 **கண்ணகிக்கும் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கும் நடந்த சொற்போரினை உரையாடலாக அமைத்து எழுதுக?**

**மன்னன்** : இளமையான கொடிபோன்றவளே! நீரொழுகும் கண்களுடன் எம்முன் வந்து நிற்கும் நீ யார்?

**கண்ணகி** : ஆராய்ந்து அறிந்து நீதி வழங்காத மன்னனே! சிபி மன்னனும், மனுநீதி சோழனும் பிறந்த ஊர் புகார் நகரம். அப்புகார் நகரில் பிறந்த மாசாத்துவானின் மகனை மணம் புரிந்தேன். உழ்வினைப் பயனால் நின் மதுரை நகரத்திற்கு வந்து, என் காற்சிலம்பை விற்க முயன்று, உன்னால் கொலை செய்யப்பட்ட கோவலன் மனைவி நான். கண்ணகி என்பது என் பெயர்.

**மன்னன்** : கள்வனைக் கொலை செய்தல் கொடுங்கோலன்று, அதுவே அரச நீதி.

**கண்ணகி** : அறநெறியில் செல்லாத அரசனே என் காற்சிலம்பு மாணிக்கப் பரல்களைக் கொண்டது.

**மன்னன்** : நீ கூறியது நல்லதே எம்முடையச் சிலம்பின் பரல்கள் முத்துக்களே. **(கோவலனிடம் கைப்பற்றிய காற்சிலம்பு கொண்டுவரப்படுகிறது. கண்ணகி காற்சிலம்பினை ஓங்கி உடைக்கிறாள். அதிலிருந்து மாணிக்கப் பரல்கள் வெளிப்படுகின்றன)**

**மன்னன்** : பொன்செய்யும் கொல்லனின் பொய்யுரை கேட்டு அறநெறி தவறிய, நானோ அரசன்! நானே கள்வன்.

**(மன்னன் மயங்கி வீழ்ந்தான். கோப்பெருந்தேவியும் நிலத்தில் வீழ்ந்து இறந்தாள்.)**

5 **குகனுக்கும் இராமனுக்கும் நடைபெற்ற உரையாடலைத் தொகுத்து எழுதுக?**

✠ **இராமன் கங்கையின் மறுக்கரை அடைதல்**

இராமன் தன் மனைவி சீதையுடனும் தம்பி இலக்குவனுடனும் காட்டிற்கு சென்றான். செல்லும் வழியில் கங்கைக் கரையை அடைந்தான்.

✠ **குகன் இராமனைக் காண வருதல்**

சிருங்கிபேரம் என்னும் நகரில் வாழும் குகன் இராமனைக் காண வருகிறான். இராமனுக்குக் கொடுப்பதற்காக தேனையும் மீனையும் கொண்டு வருகிறான்.

✠ **குகனைப் பற்றி இராமனிடம் இலக்குவன் கூறியது**

'தாயினும் சிறந்த அன்பினன்; கங்கை ஆற்றில் செல்லும் நாவாய்க்குத் தலைவன்; குகன் என்பவன் தங்களைக் காண வந்துள்ளான்' என குகனைப் பற்றி இலக்குவன் இராமனிடம் கூறுகிறான்.

✠ **தேனையும் மீனையும் இராமனுக்குக் கொடுத்தல்**

குகன் இராமனைப் பணிவுடன் வணங்கி, 'தேனையும் மீனையும் பக்குவப்படுத்திக் கொண்டுவந்துள்ளேன். தாங்கள் ஏற்க வேண்டும்' என வேண்டினான். இராமனும் அன்பினால் கொண்டு வந்தது அமிழ்தினும் இனியது என அதை உண்டான்.

✠ **குகன் வேண்டுகோள்**

'தங்களைப் பிரிந்து செல்ல எனக்கு மனமில்லை. தங்களுக்கு வேண்டிய தொண்டு செய்வேன். தங்களுடன் இருக்க அனுமதிக்க வேண்டும்' என்று வேண்டினான். இராமனும் அதற்கு இசைந்தான்.

✠ **மூவரும் படகில் செல்லுதல்**

குகன் கொண்டு வந்த படகில் இராமன், சீதை, இலக்குவன் ஆகிய மூவரும் சென்றனர். அவர்கள் பிரிவால் அந்தனர்கள் மனமுருகி நின்றனர்.

✠ **இராமனின் சகோதரத்துவம்**

உடன் வருவதாகக் கூறிய குகனை நோக்கி, 'என் உயிர் போன்றவன் நீ; இலக்குவன் உன் தம்பி; சீதை உன் கொழுந்தி; துன்பம் உண்டாயின் இன்பமும் உண்டு; பிரிவு இடைக்காலத்ததே; வருந்த வேண்டாம்; நாங்கள் உடன் பிறந்தோர் நால்வர்; இனி உன்னுடன் சேர்த்து ஐவரானோம்' என இராமன் கூறினான்.

**6. அப்பூதியடிகளார் இல்லத்தில் நிகழ்ந்ததனை விவரித்து எழுதுக.**

✠ **திருநாவுக்கரசர் தண்ணீர் பந்தல் காணல்**

திருநாவுக்கரசர், மக்கள் நடந்து செல்லும் பாதையில் அமைக்கப்பெற்ற குளிர்ச்சி மிக்க தண்ணீர் பந்தலை கண்டார். அதில் திருநாவுக்கரசர் என்னும் பெயர் எழுதப்பட்டிருந்ததைக் கண்டு வியந்தார்.

✠ **அப்பூதியடிகளிடம் பெயர் வைத்த காரணம் கேட்டல்**

"நீவிர் வைத்த தண்ணீர் பந்தலில் உம்பெயர் எழுதாமல் வேறு பெயர் எழுத காரணமென்ன?" என்று வினவினார்.

✠ **திருநாவுக்கரசரின் பெருமை உரைத்தல்**

"கல்லோடு கட்டிக் கடலில் எறிந்தபோது, அக்கல்லையே தெப்பமாக கொண்டு கரையேறியவர்" என அப்பூதியடிகள், திருநாவுக்கரசரின் பெருமையினை உரைத்தார். உடனே திருநாவுக்கரசர், அந்த சிறியவன் நானே எனக் கூறினார்.

✠ **திருநாவுக்கரசரை விருந்துண்ண அழைத்தல்**

அப்பூதியடிகள் திருநாவுக்கரசரின் தாமரைப் போன்ற திருவடிகளை வணங்கி விருந்துண்ண அழைத்தார். அவரும் அதற்கு இசைந்தார்.

✠ **மூத்த திருநாவுக்கரசை பாம்பு தீண்டல்**

திருநாவுக்கரசருக்கு விருந்து படைப்பதற்காக மூத்த திருநாவுக்கரசை வாழை இலை அரிந்து வரும்படி கூறினார். வாழை இலை அரியும் போது பாம்பொன்று உள்ளங்கையில் தீண்டியது. மகன் இறந்ததை மறைத்து திருவமுது படைக்க அப்பூதியடிகள் எண்ணினார்.

✠ **மூத்த திருநாவுக்கரசர் இறந்ததை அறிதல்**

மூத்த திருநாவுக்கரசை திருநீரு அணிவிக்க நாவுக்கரசர் அழைக்கிறார். அதற்கு அப்பூதியடிகள் ' அவன் இங்கு உதவான்' என்றார். பின் பாம்பு தீண்டி அவன் இறந்தான் என்பதை திருநாவுக்கரசர் அறிந்தார்.

✠ **பதிகம் பாடி உயிர்ப்பித்தல்**

திருநாவுக்கரசர் சிவபெருமானை வேண்டி, 'ஒன்றுகொலாம்' எனும் பதிகம் பாடி மூத்த திருநாவுக்கரசை உயிர்ப்பித்தார்.

**7. பெரியாரைத் துணைகோடல் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

✠ **பெரியாரது இலக்கணம்**

1. அறிவில் தெளிந்த பெரியாரது நட்பை ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
2. தனக்கு வந்த துன்பத்தைப் போக்கி இனி, மீண்டும் துன்பம் வராமல் காக்கும் தன்மை உடையாரிடம் நட்பு கொள்ள வேண்டும்.

✠ **பெரியாரைத் துணைக் கொள்வதன் சிறப்பு**

3. அறிவறிந்த பெரியோரை நட்பாக்கிக் கொள்ளுதலே, பேறுகளுள் எல்லாம் அரிய பேறாகும்.
4. வலிமைகளுள் எல்லாம் சிறந்த வலிமை, தம்மைக் காட்டிலும் அறிவில் சிறந்தவரை உறவினராய் ஏற்றல்.

5. தக்க வழிகளை ஆராய்ந்து கூறும் அறிஞர்களையே உலகம் கண்ணாகக் கொண்டு நடக்கிறது. மன்னனும் அவர்களையே நட்பாக்கிக் கொள்ள வேண்டும்.

✠ **பெரியாரை துணைகோடலின் பயன்**

6. பெரியோரை சார்ந்து வாழ்பவருக்கு பகைவரால் தீங்கு செய்ய இயலாது.

7. இடித்துத் திருத்தும் பெரியோரை துணையாகக் கொண்டு வாழ்பவரை கெடுக்கும் வலிமையுடையவர் எவரும் இல்லை.

✠ **பெரியாரைத் துணைக் கொள்ளாமையால் ஏற்படும் குற்றங்கள்**

8. பெரியோரைத் துணையாகக் கொள்ளாத அரசன், பகைவர் இன்றி தானே கெட்டழிவான்.

9. முதலீடு இல்லாதவர்க்கு ஊதியம் இல்லை. அதுபோல பெரியார் துணை இல்லாதவர்க்கு நிலைத்த தன்மை இல்லை.

10. நல்லவர் நட்பைக் கைவிடுவது, பலரைப் பகைத்துக் கொள்வதைவிட பன்மடங்கு தீமை உடையதாகும்.

8. **பொருள்செயல்வகை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் வளமார்ந்த கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

✠ **பொருளின் சிறப்பு**

1. ஒருபொருட்டாக மதிக்காதவரையும் பிறர் மதிக்குமாறு செய்வது பொருள்.

2. செல்வம் இல்லாரை எல்லாரும் இகழ்வர். செல்வரை எல்லாரும் சிறப்பு செய்வர்.

3. செல்வம் என்னும் அணையா விளக்கு, அதனை உடையருக்கு பகைமை என்னும் இருளைப் போக்கும்.

✠ **பொருளீட்டும் நெறி**

4. பிறருக்குத் தீங்கின்றி நல்வழியில் ஈட்டியபொருள், அறத்தினையும், இன்பத்தையும் தரும்.

5. அன்பும் அருளுமின்றி பிற வழியில் வரும் பொருளை நீக்குதல் வேண்டும்.

6. அரசுரிமையால் வந்த பொருளும், மக்கள் வரியாகத் தந்த பொருளும், பகைவரை வென்று கொண்ட திறைப்பொருளும் அரசனுக்குரியதாகும்.

✠ **பொருளின் பயன்**

7. அன்பு என்னும் தாய் பெற்ற அருள் என்னும் குழந்தை, பொருள் என்னும் வளர்ப்புத் தாயால் பேணப்படும்.

8. தன்கைப்பொருள் கொண்டு ஒருவன் செய்யும் செயலானது, குன்றின்மேல் நின்று யானைப்போரைக் காண்பதற்கு ஒப்பாகும்.

9. பொருளைப் போன்று பகைவரின் செருக்கை அறுக்கும் கூர்மையான படைக்கலம் எதுவும் இல்லை.

10. சிறந்த பொருளை நல்வழியில் ஈட்டியவர்க்கு அறனும் அன்பும் ஒருசேரக் கைக்கூடும்.

## உரைநடை - நெடுவினாக்கள் - வினா எண். 48

1. **செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாடுகளை விளக்கி எழுதுக.**

✠ **தாய்மைச் சிறப்பு**

தமிழ்மொழி திராவிட மொழிகளுக்கு தாயாக திகழ்கிறது. ஆயிரத்தெண்ணூறு மொழிகளுக்கு வேர்ச்சொற்களையும், நூற்றெண்பது மொழிகளுக்கு உறவுப் பெயர்களையும் தந்துள்ளது. எனவே தமிழ் உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாகத் திகழ்கிறது.

✠ **பிறமொழித் தாக்கமின்மை**

ஆங்கில மொழியிலும், வடமொழியிலும் பிறமொழிச் சொற்கள் கலந்துள்ளதைப் போல் தமிழ் மொழியிலும் பிறமொழிச் சொற்கள் கலந்துள்ளன. பிறமொழி சொற்களை நீக்கினால் பல மொழிகள் இயங்கா. ஆனால், தமிழ்மொழி ஒன்றே பிறமொழிசொற்களை நீக்கினாலும் இயங்கவல்லது.

✠ **இலக்கிய இலக்கண வளம்**

உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்றுள்ளவை சங்க இலக்கியங்கள். இவற்றின் மொத்த அடிகள் 26,350. அக்காலத்தே இவ்வளவிற்கு விரிவாக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள், உலகில் வேறு எந்த மொழியிலும் இல்லை என்பது செக் நாட்டு மொழியியல் அறிஞர் கபில்சுவலபில் முடிபு. தமிழில் நமக்கு

கிடைத்த மிகவும் பழைமையான இலக்கணம் தொல்காப்பியம். இதில் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றனுக்கும் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியரின் ஆசிரியர் அகத்தியர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களையும் எழுதியுள்ளார்.

✠ **நடுவு நிலைமை**

சங்க இலக்கியங்கள் இனம், மொழி, மதம் கடந்தவை; இயற்கையோடு இயைந்தவை; உலகத்தார் ஏற்கும் பொதுக் கருத்துகள் உடையவை; மக்கள் சிறப்புடன் வாழ ஏற்ற கருத்துகளை மொழிபவை.

✠ **மொழிக் கோட்பாடு**

தொல்காப்பியர் கூறும் எழுத்துப் பிறப்பு முறைகள் மொழி நூலாரையே வியப்பில் ஆழ்த்துவன. இன்றைய மொழியியல் வல்லுநர்களும் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகிறது என்பார் முனைவர் எமினோ

**2. பெண் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகளாகப் பெரியார் கூறியுள்ளவற்றைத் தொகுத்து எழுதுக**

பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை, அரசுப்பணி ஆகியன பெண் முன்னேற்றத்திற்கான அடிப்படை தேவைகளாக பெரியார் கூறுகிறார்

✠ **பெண்கல்வி**

‘ நமது சமுதாயத்தில் பெண்கள் சார்ந்த தலைகீழான ஒரு புரட்சி ஏற்பட்டாலொழிய, பெரிய மாறுதல்களைக் கொண்டு வரவியலாது. பெண்கள் மனிதப் பிறவிகளாய் நடமாட வேண்டுமானால் அடுப்பங்கரையை விட்டு வெளியேற வேண்டும். பெண்கள் கல்வி கற்றாலொழிய சமூகத்தில் மாற்றங்கள் ஏற்படாது.

ஆண்கள் பெண்களை படிக்க வைக்க வேண்டும். ஆராய்ச்சிப் படிப்பும் தாராளமாய்க் கொடுக்கப்பட வேண்டும் என்று பெண்கல்வி பற்றி பெரியார் எடுத்துக் கூறுகிறார்.

✠ **பெண்ணுரிமை**

‘ ஆணுக்குப் பெண் இளைப்பில்லை’ என்பதை உணர்ந்து, பெண்கள் தத்தம் கணவனுக்கு மட்டும் உழைக்கும் அடிமைகளாக இராமல், மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றும் புகழ் பெற்ற பெண்மணிகளாக விளங்கவேண்டும்.

✠ **சொத்துரிமை**

பெண்ணடிமைக்கு முதன்மையான காரணம் சொத்துரிமை இல்லாததே எனலாம். பெண்களுக்கு சொத்துரிமை கொடுத்துவிட்டால், அவர்களுக்கு இருக்கும் எல்லாவகையான அடிமைத்தளைகளும் ஒழிந்துபோகும்.

✠ **அரசுப்பணி**

அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் அரசுப் பணியைப் பெற வேண்டும். அரசாங்கத்தின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும்போது, நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும்.

**3. பெண் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளனவாகப் பெரியார் கூறுவனவற்றை எழுதுக.**

குழந்தைத் திருமணம், மணக்கொடை, கைம்மை வாழ்வு ஆகியன பெண்கள் முன்னேற்றத்திற்கு தடையாக உள்ளனவாக பெரியார் கூறுகிறார்.

✠ **குழந்தைத் திருமணம்**

பெரியார் பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார். ‘ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கைப் பயணமா? இது, சிற்றில் சிதைத்து விளையாடும் பருவத்தில் பெற்றோர் செய்த வேதனை விளையாட்டு’ எனக் கூறி குழந்தைத் திருமணத்தை நீக்கப் பாடுபட்டார்.

✠ **மணக்கொடை**

தமிழர்களிடையே இன்று பரவியுள்ள பெருநோய் ஒன்று உண்டு. அதுவே மணக்கொடை. பெற்றோர்கள் தனது மகனின் கல்விக்காக செலவழித்தப் பணத்தை, வீட்டிற்கு மனைவியாக வருபவளிடம் பெற நினைக்கின்றனர். இந்நிலை மாற வேண்டும். ஆண்கள் செக்கு மாடுகளாக இல்லாமல், பந்தையக்குதிரைகளாக மாற வேண்டும். இன்றைய இளைஞர்களிடையே உழைத்து முன்னேற வேண்டும் என்ற எண்ணம் வளர வேண்டும் என்று கூறுகிறார்.

**✠ கைம்மை வாழ்வு**

கணவனை இழந்த பெண்கள் மறுமணம் செய்து கொள்ளக் கூடாது என்ற கருத்தினை பெரியார் மறுத்தார். 'கணவனை இழந்தோர் மறுமணம் செய்து கொள்வதில் தவறில்லை' என்று தெரிவித்தார்.

**4. அம்பேத்கரின் அரும்பணிகள் குறித்துத் தொகுத்தெழுதுக.**

அம்பேத்கர் நம் நாட்டிற்காக செய்த அரும்பணிகள் பல. அவற்றுள் சிலவற்றை இங்கு காண்போம்.

**✠ முதல் உரிமைப் போர்**

1924 ஆம் ஆண்டு கேரளாவில் வைக்கத்தில் பெரியார் நடத்திய ஆலயநுழைவு முயற்சியும், 1927 ஆம் ஆண்டு மகாத்துக் குளத்தில் தண்ணீர் எடுக்கும் போராட்டமும் மனித உரிமைக்காக நடத்தப்பட்ட முதல் போராட்டங்கள் ஆகும்.

**✠ விடுதலை உணர்வும் வட்டமேசை மாநாடும்**

'இங்கிலாந்து சொல்வதற்கெல்லாம் இந்தியா தலையசைக்கும் என்பது தவறு; இந்திய மக்களின் எண்ணங்களை நீங்கள் ஈடேற்ற வேண்டும்' என்று ஆங்கிலேயரிடம் அச்சமின்றி கூறினார். 1930ஆம் ஆண்டு நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில், 'மாற்றார் ஆதிக்கத்தை நீக்கி, மக்களால் ஆளப்படும் மக்களாட்சியையே நாங்கள் விரும்புகிறோம். எங்கள் கைகளில் அரசியல் அதிகாரம் வந்தாலொழிய எங்கள் குறைகள் நீங்கா' என மொழிந்தார்.

**✠ சட்டமேதை**

அரசியலமைப்பு சட்டம் வகுக்க நேரு அமைத்த எழுவர் குழுவிலிருந்து பலரும் விலகினர். அம்பேத்கர் ஒருவரே அந்த ஒப்பற்ற பணியை செய்து முடித்தார்.

**✠ கல்வி வளர்ச்சியில் அம்பேத்கர்**

அம்பேத்கர், 1946ஆம் ஆண்டு மக்கள் கல்விக் கழகத்தைத் தோற்றுவித்தார். மும்பையில், அவரது அரிய முயற்சியால் உருவான சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தில் இன்றைய அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

**5. அம்பேத்கர் எத்தகைய இந்தியாவை அமைக்க விரும்பினார்?**

**✠ சாதி இல்லா சமுதாயம்**

சாதி என்பது எல்லாம் வல்ல ஒருவன் கட்டளையால் தோன்றியதன்று. குறிப்பிட்ட சில சூழ்நிலைக்கு ஆட்பட்ட மனித சமூகவாழ்வில் தானாகவே வேரூன்றிவிட்ட வளர்ச்சியாகும். சாதி களையப்பட வேண்டிய களை என்று அம்பேத்கர் கூறினார்.

**✠ அண்ணலாரின் இலட்சிய சமூகம்**

அண்ணல் அம்பேத்கர் சிறந்த இலட்சியவாதி. அவர், "ஓர் இலட்சிய சமூகம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையகாக் கொண்டது" என்றார்.

**✠ சனநாயகம்**

"சனநாயகத்தின் மறுபெயர்தான் சகோதரத்துவம் சுதந்திரம் என்பது சுயேட்சையாக நடமாடும் உரிமை எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதே சமத்துவமாகும்" என்று சனநாயகத்திற்கு அரியதொரு விளக்கம் தந்தார்.

**✠ மனிதநேயம் உள்ள இந்தியா**

சமத்துவத்தின் மறுபெயரே மனிதநேயம். எங்கே சமத்துவம் மறுக்கப்படுகிறதோ, அங்கே மனிதப் பண்பு மறைந்துவிடுவதை அவர் அனைவருக்கும் உணர்த்தினார். சமுதாயமென்னும் வேரைச் சாதிப் புழுக்கள் அரித்துவிடாமல் தடுத்த நச்சுக் கொல்லி மருந்து அவர்.அறிவின்றி நாடு முன்னேற முடியாது என உரைத்தார்.

**6. மேடைப் பேச்சின் கூறுகளை விளக்குக.**

எடுத்தல், தொடுத்தல், முடித்தல் என்பன பேச்சின் முக்கூறுகளாகும்.

**✠ எடுத்தல்**

கேட்போரை வயப்படுத்தும் முறையில் பேச்சினைத் தொடங்குதல் வேண்டும். அவையில் இருப்போரை விளித்துச் சுருக்கமான முன்னுரையுடன் பேசத் தொடங்குவதே சிறப்புடையது. பேசத் தொடங்கிய ஓரிரு மணித்துளிகளில் பேசப்போகும் பொருளில் புகுந்து விடுவது பாராட்டுக்குரியது.

**தொடுத்தல்**

பொருளை விரித்துப் பேசும்முறை தொடுத்தல் எனப்படும். அன்றலர்ந்த மலரை மாலையாகத் தொடுத்தல் இதற்கோர் எடுத்துக்காட்டாம். பலவகை மலர்களை இடையிடையே அமைத்து மாலைகள் தொடுப்பது இயல்பு. அதுபோல சுவைமிக்க சொற்களும் குணமிக்க கருத்துகளும் பிணைத்துப் பேசுதல் வேண்டும்.

**பேச்சின் அணிகலன்கள்**

எண்ணங்களை சொல்லும் முறையால் அழகுப்படுத்துவதே அணி எனப்படும். இடையிடையே கேட்போர் சுவைக்கத்தக்க உவமைகள், எடுத்துக்காட்டுகள், சொல்லாட்சிகள், பல்வேறு வகையான நடைகள், சிறுசிறு கதைகள் முதலியன அமையப் பேசுவதே சிறந்த பேச்சாகும்.

**உணர்த்தும் திறன்**

சொல்லக் கருதும் கருத்தை சுவையுடனும் நிரல்படவும் சொல்லுதல் வேண்டும். திறம்படவும் தெளிவாகவும் சொல்லுதல் வேண்டும். உணர்ச்சியும் ஊக்கமும் உடையதாய் அமைதல் வேண்டும்.

**முடித்தல்**

பேச்சின் சுருக்கத்தைக் கூறி முடித்தல், உணர்ச்சியைத் தூண்டும் முறையில் முடித்தல், பாராட்டி முடித்தல், பொருத்தமான கவிதைக் கூறி முடித்தல் என முடிக்கும் முறைகள் பல உள்ளன. சிறந்த பேச்சாளர் எப்படி முடித்தாலும் அழகுறவே அமையும்.

**7. திரைப்படம் எடுத்தலுக்குத் தேவையான ஆயத்தப்பணிகளைத் தொகுத்தெழுதுக.**

**திரைப்படம்**

திரைப்படம் ஓர் அற்புதமான கலை. உலகில் பல்வேறு மொழிகள் இருப்பினும், மக்கள் அனைவரும் எளிதில் புரிந்துகொள்ளும் உலகமொழி திரைப்படம்.

**கதைமாந்தர்கள்**

திரைப்படம் எடுப்பதற்கு முன்பு, கதை, உரையாடல், பாடல் முதலியன ஆயத்தம் செய்யப்படும். கதை மாந்தர்கள் தேர்வு செய்யப்படுவர். பின் அவர்களுக்கு ஏற்ற உடைகள் வடிவமைக்கப்படும். துணை நடிகர்கள் தேர்வு செய்யப்படுவர்.

**இயக்குநர்**

நடிப்பாற்றலை எடுத்துக்கூறிச் சில நேரங்களில் தாமே நடித்தும், படத்தை முழுமையாக வடிவமைப்பவரை இயக்குநர் என்பர்.

**திரைப்படச்சுருள்**

திரைப்படம் எடுக்கப் பயன்படும் படச்சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது. படம் எடுக்கப் பயன்படும் சுருள், எதிர்ச்சுருள் எனப்படும். ஒலி,ஒளிப்பதிவுகளைத் தனித்தனிப் படச்சுருள்களில் அமைப்பர்.

**படப்பிடிப்புக் கருவி**

படப்பிடிப்புக் கருவி அசைந்தால் படம் தெளிவாக தெரியாது. எனவே உறுதியான உயரமான இடத்தில் அக்கருவியைப் பொருத்திடுவர். சிலர் நகர்த்தும் வண்டியில் பொருத்துவதும் உண்டு.

**ஒலிப்பதிவு**

ஒலி அலைகள் மின் அதிர்வுகளாக மாற்றப்பட்டு ஒருவகை விளக்கினுள் செலுத்தப்படும். அம்மின்னோட்டத்திற்கு தக்கவாறு விளக்கின ஒளி மாறும். இவ்வொளி, படச்சுருள் விளிம்பிலுள்ள பகுதியில் விழுந்து, அங்கு அஃது ஒலிப்பாதையைத் தோற்றுவிக்கும்.

**திரைப்படக் காட்சிப் பதிவு**

ஒளிஒலிப்படக்கருவி என்னும் கருவி திரையரங்குகளில் திரைப்படம் காட்டப் பயன்படுகிறது. இதைப் பயன்படுத்தி மிகவும் தெளிவாக திரைப்படம் காண்பிக்கப்படுகிறது.

**8. தொழிற்கல்வி, தொழில்நுட்பக்கல்வி குறித்து விரிவாக எழுதுக.**

**தொழிற்கல்வி**

மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம் முதலியவை தொழிற்கல்வித் துறைகள். மேநிலைக்கல்வியில் உயர் மதிப்பெண் பெற்றோர் இத்துறைகளில் சேர்ந்து பயில்வர். இப்பாடப்பிரிவில் படித்து முடித்தவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ப உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணிபுரியும் வாய்ப்புண்டு.

தற்போது உயிரித்தொழில்நுட்பத்துறை, நுண்ணியல் தொழில்நுட்பத்துறை ஆகிய இரண்டும் வளர்ந்து வரும் தொழில்நுட்பத்துறைகளாகும். சுற்றுச்சூழல், வேளாண்மை, மருத்துவம் முதலிய துறைகளும் வேலைவாய்ப்புத் துறைகளாக விளங்கி வருகின்றன.

✠ **தொழில் நுட்பக் கல்வி**

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள், தாம் பெற்ற உயர்மதிப்பெண்களுக்கு ஏற்ப பல்தொழிநுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து பயிலலாம். பொறியியல் துறையில் உள்ளதுபோலப் பல்வேறு துறைகள் இதிலும் உண்டு.

மேல்நிலைக்கல்வியில் தேர்ச்சி பெற்றவர்கள், இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்று இடைநிலை ஆசிரியர்களாக பணியில் சேரலாம். மேலும் செவிலியர், கூட்டுறவுப் பயிற்சி பெற்று வேலை வாய்ப்புகளைப் பெறலாம்.

**9. கலை, அறிவியல் கல்வி, சிறுதொழில்கல்வி குறித்து விவரிக்க.**

✠ **கலை அறிவியல் கல்வி**

மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றோர் கலை, மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்ந்து பயிலலாம்.

❖ **பட்டங்கள்:**

தமிழ், ஆங்கிலம், வேதியியல், விலங்கியல், தாவரவியல், பொருளியல், வரலாறு, கணக்குப்பதிவியல், கணிப்பொறியியல் முதலியப் பாடப்பிரிவுகளில் இளங்களைப் பட்டமும் அதன்பின்னர், முதுகலைப் பட்டமும் பெறலாம்.

❖ **பட்டதாரி ஆசிரியர்பணி**

பட்டம் பெற்றோர் கல்வியியல் கல்லூரியில் சேர்ந்து இளம் கல்வியியல் பட்டம் பெற்றுப் பட்டதாரி ஆசிரியர் பணியைப் பெறலாம்.

❖ **பிற வேலைவாய்ப்புகள்**

பட்டம் பெற்றவர்கள் தமிழ்நாடு அரசுத் தேர்வணையம், நடுவணரசுத் தேர்வாணையம், வங்கித்துறை ஆயுள் காப்பீட்டுத்துறை, தொடர்வண்டித்துறை முதலியத்துறைகள் நடத்தும் போட்டித்தேர்வில் வெற்றிப் பெற்று வேலை வாய்ப்புகளைப் பெறலாம்.

தமிழ் வழியில் பயில்வோருக்கு அரசுப்பணியில் இருபது விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கி தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

✠ **சிறுதொழில் கல்வி**

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள், பெறாதவர்கள் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் சேர்ந்து ஓராண்டு அல்லது ஈராண்டு பயிற்சி பெற்று பணியில் சேரலாம்.

❖ **படிப்புகள்**

கம்மியர், கடைசல்பிடிப்பவர், கட்டட வரைவாளர், நில அளவையர், தச்சர் முதலிய படிப்புகளும், இயந்திரம், வாகனம், தொலைக்காட்சி, குளிரூட்டும் கருவி, செல்பேசி, கணினி முதலியவற்றைப் பழுது பார்க்கும் படிப்புகளும் உள்ளன.

❖ **சுய வேலை வாய்ப்பு**

இப்படிப்புகளைப் படித்தவர்கள் வேலைக்காக காத்திருக்க வேண்டியதில்லை. சுயதொழில் தொடங்கி வேலை வாய்ப்பினைப் பெருக்கிக் கொள்ள இயலும்.

**மனப்பாடப் பகுதி - வினா எண் 49**

மனப்பாடப் பாடல் முழுமையும் படிக்கவும்.

**உன்னால் முடியும் போராடு! உலகை வென்று நடைபோடு!**

**அன்புடன்**

**வே.நஞ்சகுமார், பட்டதாரி தமிழாசிரியர்,**

**அரசு மகளிர் மேல் நிலைப் பள்ளி,**

**கிருஷ்ணகிரி 635 001.**

Email: vnanjakumar@gmail.com.